தினமணி

இன்றைய வேளாண் செய்திகள்

25.04.2013 A.M

## நீடித்த நவீன கரும்பு சாகுபடி!



கரும்பு விவசாயிகள் குறைந்த செலவில் கூடுதல் லாபம் பெற வேண்டுமெனில், நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையைப் பின்பற்ற வேண்டும் என வேளாண்மை உதவி இயக்குநர் எஸ்.ரவிக்குமார் தெரிவித்தார்.

தருமபுரி ஒன்றியத்துக்குள்பட்ட கோடுஹள்ளி ஊராட்சியில் அண்மையில் நடைபெற்ற உழவர் பெரு விழாவில், நீடித்த நவீன கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்து அவர் பேசியது: வழக்கமான முறையில் கரும்பு சாகுபடி செய்வதைத் தவிர்த்து, இன்றைய சூழலில் நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறைகளைப் பின்பற்றுவதே சிறந்தது. முன்பு ஓர் ஏக்கருக்கு 30 ஆயிரம் விதைப்பருக்கள் கொண்ட கரணைகளைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால், நீடித்த நவீன கரும்பு சாகுபடி முறையில் 5 ஆயிரம் நாற்றுகளே போதுமானது. 25 முதல் 35ஆவது நாள் நாற்றுகளை நடவு செய்ய வேண்டும். வரிசைக்கு வரிசை 5 அடியும், பயிருக்குப் பயிர் 2 அடியும் இடைவெளிவிட்டு நடவு செய்ய வேண்டும். ஏக்கருக்கு 5 ஆயிரம் நாற்றுகள் தேவை. சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து நாற்று நடவு செய்ய வேண்டும்.

கரும்புப் பயிருடன் ஊடுபயிரும் சாகுபடி செய்வதால் இரட்டை வருமானம் கிடைக்கும். பார் மற்றும் சால் முறை அமைப்பில் உரமிடுவதால் உரங்கள் சரியான முறையில் பயிர்களுக்கு கிடைக்கும். வீண் செலவுகள் குறையும். தண்ணீரும் சரியாகப் பயன்படுத்தப்படும்.

ரகங்கள்: முன்பட்டமான டிசம்பர்-ஜனவரி மாதத்துக்கு கோ 86032, கோ 94008, கோ 90063, கோ.உ. 92102, கோ. 99004 ஆகிய ஆலைக்கேற்ற ரகங்களைப் பயிரிடலாம். வெல்லத்துக்கு உகந்தபடி கோ. 86032, கோ 99004, கோ.க.90063, கோ.கு. 94047 ஆகிய ரகங்களைத் தேர்வு செய்யலாம்.

பின்பட்டமான சித்திரை-வைகாசி மாதத்துக்கு ஆலைகளுக்கு ஏற்ற ரகங்களாக கோ 86032, கோ. 99004, கோ. 93076 ஆகிய ரகங்களைத் தேர்வு செய்யலாம். வெல்லத்துக்கு உகந்தபடி கோ. 86032, கோ 99004 ஆகிய ரகங்களைத் தேர்வு செய்யலாம்.

ஊடு பயிர்: ஊடுபயிராக சோயா பீன்ஸ், உளுந்து, பச்சைப்பயறு, சணப்பை ஆகியவற்றைப் பயிரிடலாம்.

நேரடி உரங்கள்: தழைச்சத்து 275 கிலோ அல்லது யூரியா 600 கிலோ, மணிச்சத்து 62.5 கிலோ அல்லது சூப்பர்பாஸ்பேட் 400 கிலோ இட வேண்டும். சாம்பல் சத்து 112.5 கிலோ அல்லது மூரியேட் ஆப் பொட்டாஷ் 188 கிலோ அல்லது கலப்பு உரங்கள் இடலாம். மணிச்சத்து முழுவதும் அடியுரமாக தழை மற்றும் சாம்பல் சத்தை 5 சரிசமமாகப் பிரித்து இட வேண்டும்.

இரும்புச் சத்து குறைபாடு: பொதுவாக, இலைகள் மூலம் இரும்புச் சத்து குறைபாடுகளைக் கண்டுணரலாம். பழுப்புநிறக் கோடுகள், இரண்டு சரிசமமான கோடுகளுக்கு இடையில் காணப்படும். முற்றிய நிலையில் இலைகள் முழுவதும் வெள்ளை நிறமாக மாறிவிடும். இதைக் கட்டுப்படுத்த பெர்ரஸ் சல்பேட் 0.5 சதவீதம் என்ற அளவில் தண்ணீரில் கலந்து 15 நாள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும்.

நீடித்த நவீன கரும்பு சாகுபடியாக இருந்தாலும், வழக்கமான விதைக்கரணை மூலம் நடைபெறும் சாகுபடியாக இருந்தாலும் அந்தந்தப் பகுதியில் உள்ள வட்டார வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி தகுந்த தொழில்நுட்ப ஆலோசனைகளைப் பெற வேண்டும் என்றார் அவர்.

இந்த நிகழ்ச்சியில், விதைச்சான்று உதவி இயக்குநர் கிருஷ்ணன் மற்றும் கால்நடைப் பராமரிப்புத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு நவீன தொழில்நுட்ப முறைகள் குறித்து விவசாயிகளுக்கு நேரடி செயல்விளக்கம் அளித்தனர்.

## கோடை உழவால் கோடி நன்மை!



பழமரச் சாகுபடியாளர்கள் கோடை உழவு செய்து பயன்பெறலாம் என்று சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: கோடை உழவால் கோடி நன்மை, சித்திரை உழவு பத்தரை மாற்றுத்தங்கம் என்றெல்லாம் பழமொழிகள் கோடை உழவின் நன்மைகளை நமக்கு கோடிட்டு காட்டுகின்றன.

கோடை மழையை அடுத்து பழமரத் தோப்புகளில் இடை உழவு மேற்கொள்வதன் மூலம் பல்வேறு நன்மைகளை பெறமுடியும்.

கோடை உழவின் நன்மைகள்:

1. மழை நீர் சேமிப்பு: பெய்யும் மழை நீரை வழிந்தோடி வீணாகி விடாமல் தடுத்து மண்ணுக்குள் இறக்கி மழை நீரை சேமிக்க கோடை உழவு உதவுகிறது. இதற்கேற்ப நாம் சரிவுக்கு குறுக்காக உழவு செய்ய வேண்டும்.

2. மண் தன்மை மேம்பாடு: மண் நன்கு பொலபொலப்பாகி, மண்ணின் தன்மை மேம்படுகிறது.

3. களைக் கட்டுப்பாடு: இடை உழவின் மூலம் களைகள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இதன் மூலம் வரும் பருவத்தில் (களைகள் பூத்து விதைகள் பரவுமுன் அழிக்கப்படுவதால்) களைகளின் தாக்கம் வெகுவாக குறையும். மேலும் பல்வேறு பூச்சிகள், நோய் கிருமிகளுக்கு களைகளை மாற்று உணவுப் பயிராக விளங்குவதால் பூச்சிநோய் தாக்குதலும் வெகுவாக குறையும்.

4. பூச்சி நோய் தாக்குதல் கட்டுப்பாடு: மண்ணில் மறைந்துள்ள கூட்டுப்புழுக்கள், கிருமிகள் இடை உழவால் வெளிப்படுத்தப்பட்டு வெயிலின் வெம்மையால் அழிக்கப்படுவதால் வரும் பருவத்தில் பூச்சி நோய் தாக்குதல் வெகுவாக குறையும். எனவே, பழமரச் சாகுபடியாளர்கள் பெய்யும் கோடை

மழையை பயன்படுத்தி பழமர தோப்புகளில் இடை உழவு மேற்கொண்டு பயன்பெறலாம் என்றார் அவர்.

### பயன் தரும் பயிர் காப்பீடு!



இயற்கை இடர்பாடுகளால் ஏற்படும் இழப்புகளைத் தவிர்க்க பயிர் காப்பீடு செய்து விவசாயிகள் பயன்பெறலாம் என்று சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு: இயற்கை இடர்பாடுகளான வறட்சி, புயல், அதிக வெப்பம், அதிகமழை, அதிவேக காற்று ஆகியவற்றால் வாழை, காய்கறிகள், மிளகாய், மலர்கள், மரவள்ளி, வெங்காயம் போன்ற தோட்டக்கலை பயிர்களில் பயிர் இழப்பும், மகசூல் இழப்பும் ஏற்பட வாய்ப்புண்டு.

அத்தகைய தருணங்களில் உதவிக்கு வருவதுதான் பயிர்க் காப்பீட்டுத் திட்டம். மத்திய அரசு நிறுவனமான வேளாண் காப்பீட்டு நிறுவனம், பயிர் காப்பீட்டுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இத்தகைய பயிர்க் காப்பீட்டுத் திட்டங்களில் விவசாயிகள் அதிகளவில் பங்கு கொண்டு பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில், தமிழக அரசு விவசாயிகள் செலுத்த வேண்டிய பிரிமியத்தில் பாதித் தொகையை மானியமாக வழங்கி வருகிறது. மீதித் தொகையை மட்டும் விவசாயிகள் பிரிமியமாக செலுத்தினால் போதும்.

1. தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம்: இத் திட்டம் திருநெல்வேலி மாவட்டத்தில் வாழை, மரவள்ளி, வெங்காயம் ஆகிய பயிர்களில் குறிக்கப்பட்ட பிர்காக்களில் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தில் இழப்பீடு, மகசூல் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. கடந்த 5 ஆண்டுகளில் குறிப்பிட்ட பயிர்களில் பெறப்பட்ட சராசரி மகசூலை அளவுகோலாக கொண்டு, மகசூல் இழப்பு கணக்கிடப்படுகிறது.

தேசிய மயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வணிக வங்கிகளிலும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் பயிர்க் கடன் பெறும் விவசாயிகள் கட்டாய அடிப்படையிலும், இதர விவசாயிகள் விருப்பத்தின் அடிப்படையிலும், இத்திட்டத்தின்கீழ் பங்கு பெறுகின்றனர்.

காப்பீடு செய்யப்படும் பயிர்களை சாகுபடி செய்யும் குத்தகைதாரர் உள்பட அனைத்து விவசாயிகளும் இத் திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம்.

செலுத்த வேண்டிய பிரிமியம்: வாழை பயிருக்கு பயிர் காப்பீடு செய்யும் தொகையில் 7.8 சதவிகிதமும், வெங்காயத்தில் 7.5 சதவிகிதமும், மரவள்ளியில் 6 சதவிகிதமும் பிரிமியமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் பயிர்க் கடன் பெறும் விவசாயிகளுக்கு பிரிமியத்தில் 50 சதவிகித மானியமும், கடன் உதவி பெறாத விவசாயிகளில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு பிரிமியத்தில் 55 சதவிகித மானியமும், இதர விவசாயிகளுக்கு பிரிமியத்தில் 50 சதவிகித மானியமும் தமிழக அரசு வழங்கி வருகிறது. விவசாயிகள் மானியம்போக எஞ்சிய தொகையைச் செலுத்தினால் போதும்.

உதாரணத்துக்கு ஒரு ஏக்கர் வாழை பயிரை ஒரு விவசாயி ஒரு லட்சம் ரூபாய்க்கு பயிர் காப்பீடு செய்ய விரும்பினால் அதற்கான பிரிமியம் ரூ.7800, அதில் சிறு குறு விவசாயிகள் ரூ.3510-ம், இதர விவசாயிகள் ரூ.3900-ம் பிரிமியமாக செலுத்தினால் போதும், எஞ்சிய தொகையை தமிழக அரசு செலுத்தி விடுகிறது. இதைவிட குறைந்த தொகைகளுக்கும் பயிர் காப்பீடு செய்யலாம்.

இதையே ஒரு விவசாயி ரூ.10 ஆயிரத்துக்கு காப்பீடு செய்ய விரும்பினால் அதற்கான பிரிமியம் ரூ.780, சிறு, குறு விவசாயிகள் ரூ.351, இதர விவசாயிகள் ரூ.390-ம் பிரிமியமாக செலுத்தினால் போதும். அதிகபட்சமாக ஒரு ஏக்கர் வாழைக்கு ரூ.4,99,224 வரைதான் பயிர் காப்பீட்டு செய்ய முடியும்.

இந்த பிரிமியத்தை உரிய படிவத்தில் விவரங்களை நிரப்பி, தேசியமயமாக்கப்பட்ட மற்றும் தனியார் வணிக வங்கிகளிலும், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளிலும் செலுத்தலாம். கடன்பெறாத விவசாயிகள் வாழை, மரவள்ளி, வெங்காயத்துக்கு பிரிமியம் செலுத்த கடைசி நாள் செப்டம்பர் 15.

2. வானிலை பயிர் காப்பீட்டுத் திட்டம்: இத் திட்டம் தக்காளி, வெங்காயம் ஆகிய காய்கறிப் பயிர்களுக்கும், மிளகாய், மலர்கள் ஆகிய பயிர்களுக்கும் திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டத்தில் வட்டாரந்தோறும் இயங்கும் தானியங்கி வானிலை நிலங்கள் தரும் மழையளவு, வெப்பநிலை, காற்றின் வேகம் ஆகிய வானிலை தகவல்களின் அடிப்படையில் இயற்கை இன்னல்களை கணக்கிட்டு இழப்பீடு வழங்கப்படுகிறது.

இத் திட்டத்தில் ஒரு ஏக்கருக்கு மிளகாய், மலர்கள், தக்காளி, வெங்காயம் ஆகிய பயிர்களுக்கு ரூ.15 ஆயிரம் காப்பீட்டுத் தொகையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரிமியமாக ஒரு ஏக்கருக்கு ரூ.1725 நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் அரசு தரும் மானியம் ரூ.825 போக, ரூ.900-ம் மட்டும் விவசாயிகள் பிரிமியமாக செலுத்தினால் போதும். இத் திட்டத்தில் பிரிமியம் செலுத்த கடைசி நாள் ஆகஸ்ட் 31.

இது குறித்த விவரங்களுக்கு விவசாயிகள் தங்கள் பகுதி தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

## ஒவ்வொரு உழவனும் ஒரு விஞ்ஞானி: வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் பேச்சு

நாட்டில் உள்ள ஒவ்வொரு உழவனும் ஒரு விஞ்ஞானி என வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் தெரிவித்தார்.

திண்டுக்கல் காந்திகிராம பல்கலை. வளாகத்தில் நடைபெற்ற காந்திய வழியில் மாதிரி கிராமம் உருவாக்கும் திட்டத்தை செவ்வாய்க்கிழமை தொடக்கி வைத்து அவர் பேசியது:

வளமான நாட்டில் வறுமையில் வாழும் மக்கள் என இந்தியர்களை பார்த்து, முன்னாள் பிரதமர் நேரு கூறிய கருத்து, தற்போதும் நிலைத்து நிற்பதை பார்க்கும்போது மிகுந்த வேதனையாக உள்ளது. நாட்டில் உள்ள 33 சதவீத குழந்தைகள் ஊட்டச்சத்து குறைந்தவர்களாக உள்ளனர்.

காந்திய வழியில் உருவாகும் மாதிரி கிராமங்களில் முதல்கட்டமாக மது ஒழிப்பை கொண்டு வர வேண்டும். அதன்மூலம் கிராமவாசிகளின் வறுமையை 50 சதவீதம் ஒழிக்க முடியும். மகளிரின் வாழ்க்கை தரம் மேம்படும். பசியில்லாத கிராமங்களை உருவாக்கும் போதுதான், காந்திய கொள்கை வெற்றி பெறும்.

நவீன தொழில்நுட்பங்கள் மூலம் அனைத்து துறைகளும் முன்னேற்றம் அடைந்துள்ளன. விவசாயிகள் முதல் மீனவர்கள் வரை அதனை பயன்படுத்தும் நிலையும் உருவாகி உள்ளது. விவசாயிகள் மண் வளத்தை காத்து, சாகுபடி நிலங்களை அதிகரிக்க வேண்டும். அதேபோல், நீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ள தற்போதைய நிலையில், சொட்டு நீர் பாசனத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

ஊட்டச்சத்து நிறைந்த தானியப் பயிர்களான கேழ்வரகு, சாமை, கம்பு, தினை, ராகி உள்ளிட்டவற்றை அதிக அளவில் சாகுபடி செய்ய வேண்டும் என்றார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்தது:

தமிழகத்தில் 34 வகையான பயிர் வகைகள் சாகுபடி செய்யப்படுகின்றன. அதில் கோதுமை

உள்ளிட்ட 18 வகையான பயிர்கள் திண்டுக்கல் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படுகிறது.

தமிழகத்திலேயே முதன்முறையாக தஞ்சை மாவட்டம் பசுபதி கோவில் பகுதியில் பண்ணைப் பள்ளி திங்கள்கிழமை தொடங்கப்பட்டுள்ளது. பண்ணைப் பள்ளிகள் மூலம் விவசாயத் துறையில் பயன்படுத்தப்படும், நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், விவசாயிகளின் அனுபவங்கள் குறித்தும் ஒருவருக்கு ஒருவர் அறிந்து கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு உழவனும் ஒரு விஞ்ஞானி. கிராமவாசிகளுக்கு எதுவும் தெரியாது என்ற நிலையை மாற்ற வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டம் கன்னிவாடி அடுத்துள்ள மெஞ்ஞானபுரத்தில் இரண்டாவது பண்ணைப் பள்ளி இன்று(செவ்வாய்க்கிழமை) தொடங்கப்பட்டுள்ளது. இதேபோல், தமிழகத்தின் முதல் பயறு கிராமமாக புதுக்கோட்டை மாவட்டம் இடையப்பட்டியில் உருவாகியுள்ளது. அந்த கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் ஒரே வகையான பயறு சாகுபடி செய்து, தங்கள் கிராமத்திற்கு தனி அடையாளத்தை பெற்றுள்ளனர். இந்த நிலையே அனைத்து கிராமங்களும் பெற வேண்டும். அதன்மூலம் பயறு உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெற வேண்டும்.

தற்போது, 50 லட்சம் டன் பயறுகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொண்டிருக்கும் நிலை எதிர்காலத்தில் மாற வேண்டும் என்றார் அவர்.

## கோவையை குளிர்வித்த மழை

சுட்டெரிக்கும் கோடை வெயிலின் உக்கிரம் குறையும் வகையில், கோவையில் கடந்த 2 நாள்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது.

தமிழகத்தில் கோடை வெயில் சுட்டெரிக்கத் தொடங்கியுள்ளது. இந்நிலையில், கோவை நகரில் செவ்வாய்க்கிழமை மாலை இடியுடன் கூடிய மழை பெய்தது. அதேபோல புதன்கிழமை மாலையும் இடியுடன் கூடிய மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேக மூட்டத்துடன் உள்ளது.

கோவை நகர் மட்டுமல்லாமல் புறநகர் பகுதிகளிலும் மழை பெய்து வருகிறது. கோவை நகரில் கோடை வெயில் உக்கிரம் நீங்கி குளுமையான சூழல் நிலவுகிறது. தமிழகத்தில் அடுத்த 24 மணி நேரத்திற்கு மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கோவையில் செவ்வாய்க்கிழமை பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): வால்பாறை -70, பொள்ளாச்சி - 40, ஈரோடு தாளவாடி -20, கோவை, உதகை -20.

## 26-ல் வறட்சி நிவாரணம் கோரி விவசாயிகள் உண்ணாவிரதம்

வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி தமிழக விவசாயிகள் சங்கம் (கட்சி சார்பற்றது) சார்பில் பொங்கலூரில் வெள்ளிக்கிழமை (ஏப். 26) விவசாயிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட

உள்ளனர்.

÷இதுதொடர்பான ஆலோசனைக் கூட்டம் திருப்பூர் தமிழக விவசாயிகள் சங்க அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது. மாநில பொருளாளர் என்.கே.டி.பொன்னுசாமி, கோவை மாவட்டத் தலைவர் அ.கு.சண்முகம், திருப்பூர் மாவட்ட பொதுச்செயலாளர் ஈஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

÷அதன் பின், அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியது: கடந்த சட்டப்பேரவைத் தேர்தல் பிரசாரத்தின்போது, பொள்ளாச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் கள் இறக்க அனுமதிக்கப்படும் என்று முதல்வர் ஜெயலலிதா வாக்குறுதி அளித்தார். அதன்படி, கள் இறக்க அனுமதிக்க வேண்டும்.

உழவர் தலைவர் நாராயணசாமிக்கு வையம்பாளையத்தில் அரசு சார்பில் மணி மண்டபம் அமைத்துத்தரப்பட வேண்டும். கூட்டுறவுச் சங்கத் தேர்தலில் ஆளும்கட்சியினர் அத்துமீறல்களை முதல்வர் கண்டிக்க வேண்டும்.

÷வறட்சி நிவாரணத்தை உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி, பொங்கலூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே வெள்ளிக்கிழமை (ஏப்.26) உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற உள்ளது.

அனைத்து விதமான எண்ணெய்கள் கிடைக்கும் நிலையில், பாமாயில் இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும்.

தமிழக அரசு தேங்காய் கொள்முதல் செய்ய வேண்டும். ஒருகிலோ உரிக்காத தேங்காய்க்கு ரூ.30, கொப்பரைத் தேங்காய் கிலோவுக்கு ரூ.100 என அரசு கொள்முதல் செய்ய வேண்டும் என்றனர்.

## நம்பியூர் உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு இடுபொருள்கள்

கோபி அருகே நம்பியூரில் 52 விவசாயிகளுக்கு ரூ.7.25 லட்சம் மதிப்பிலான விவசாய இடுபொருள்களை முன்னாள் அமைச்சரும், கோபி சட்டப்பேரவை உறுப்பினருமான கே.ஏ.செங்கோட்டையன் வழங்கினார்.

நம்பியூர் வேளாண்மைத் துறை சார்பில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில், விவசாய இடுபொருள்களை வழங்கி கே.ஏ.செங்கோட்டையன் பேசியது:

நம்பியூர் மானாவாரி பகுதியாகும். மழையை நம்பியுள்ள விவசாயிகள், வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளனர். விவசாயிகளைக் காப்பாற்ற தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உழவர் பெருவிழாவை விவசாயிகள் பயன்படுத்தி நன்மை அடைய வேண்டும்

என்றார்.

இதில், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், ரூ.ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 476 மதிப்பிலான பவர் டிரில்லர், பைப் லைன் அமைக்க ரூ.ஒரு லட்சத்து 65 ஆயிரம் உள்பட 52 விவசாயிகளுக்கு ரூ.7.25 லட்சம் மதிப்பிலான இடுபொருள்கள் வழங்கப்பட்டன.

உழவர் பெருவிழாவை முன்னிட்டு மஞ்சள், வாழை சாகுபடி குறித்த வேளாண் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

நம்பியூர் ஒன்றியத் தலைவர் துளசிமணி, வேளாண் இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, துணை இயக்குநர் மாரியப்பன், தோட்டக்கலை உதவி இயக்குநர் கணேசமூர்த்தி, உதவி செயற் பொறியாளர் கிருஷ்ணமூர்த்தி, வேளாண் அலுவலர் சுந்தரமூர்த்தி உள்பட பலர் பங்கேற்றனர்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 34.16 அடி

பவானிசாகர் அணை நீர்மட்டம் புதன்கிழமை நிலவரப்படி 34.16 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 1,320 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீரும், வாய்க்காலில் பாசனத்துக்காக 1,500 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 1.62 டி.எம்.சி.

## கால்நடைகளுக்கு மாற்றுத் தீவனமாக அசோலா செடி வழங்க வேண்டுகோள்

கால்நடைகளின் தீவனப் பற்றாக்குறையைச் சமாளிக்க அசோலா செடிகளை மாற்றுத் தீவனமாகப் பயன்படுத்துமாறு, கால்நடைப் பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, ஈரோட்டில் உள்ள கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவிப் பேராசிரியர்கள் கவிதா, யசோதை ஆகியோர் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் பருவமழை மாற்றத்தால் வறட்சி நிலவுகிறது. மேலும், விவசாயம், மேய்ச்சல் நிலங்களின் பரப்பளவும் குறைந்து கொண்டே வருவதால் தீவனப் பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால், மாற்றுத் தீவனமான அசோலாவைப் பயன்படுத்தி தீவனச் செலவு மற்றும் தீவனத் தட்டுப்பாட்டைக் குறைக்கலாம்.

அசோலா, பெரணி வகையைச் சார்ந்த மிதவைச் செடியாகும். இவை நீரின் மேற்பரப்பில் வேகமாக வளரும். அசோலாவை கால்நடைகளுக்குப் பச்சையாகவோ, உலர் நிலையிலோ கொடுக்கலாம். அசோலாவில் 50 முதல் 60 சதவீதம் வரை புரதச்சத்து, பீட்டா கரோட்டின், அமினோ அமிலங்கள் மற்றும் தாது உப்புகள் உள்ளன.

அசோலாவை கறவை மாடுகளுக்கு மாற்றுத் தீவனமாகப் பயன்படுத்தினால் பாலின் கொழுப்புச் சத்து 10 சதவீதமும், கொழுப்பு அல்லாத திடப்பொருளின் அளவு 3 சதவீதமும் அதிகரிக்கும். மேலும், பாலின் உற்பத்தி 10 முதல் 20 சதவீதம் அதிகரிக்கிறது.

அசோலாவை கோழிகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தும்போது கோழிகள் விரைவாக வளரும். அசோலா சிறந்த உரமாகவும் பயன்படுகிறது. அசோலாவை நன்றாகக் கழுவிய பின் கறவை மாடுகளுக்கு அளிக்க வேண்டும். முதன்முதலில் அசோலாவைப் பயன்படுத்தும்போது அடர் தீவனம் ஒருபங்கு, அசோலா ஒருபங்கு வீதம் கொடுக்க வேண்டும். நன்கு பழக்கப்பட்ட பின் அசோலாவை தனியாகவே கொடுக்கலாம். பசுந் தீவனப் பற்றாக்குறையை ஈடுசெய்ய புரதச்சத்து மிகுந்த அசோலாவை உற்பத்தி செய்து நிரந்தர மாற்றுத்தீவனமாகப் பயன்படுத்தலாம்.

## மஞ்சூரில் திடீர் மழை

மஞ்சூரில் புதன்கிழமை பெய்த திடீர் மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மஞ்சூர் மற்றும் சுற்றுப் பகுதி கிராமங்களில் சில தினங்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து சமவெளிப் பகுதிகளுக்கு இணையாக இருந்தது. இந் நிலையில், புதன்கிழமை இடி, மின்னலுடன் பலத்த மழை பெய்தது. சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்த மழையால் குந்தா, கண்டிபிக்க உள்ளிட்ட பகுதிகளில் வீடுகளில் மழை நீர் புகுந்தது.

## தமிழகத்தில் பரவலாக கோடை மழை

தமிழகத்தில் பல்வேறு இடங்களில் புதன்கிழமை பெய்த கோடை மழையின் காரணமாக வெப்பம் தணிந்து, பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

தமிழகத்தில் கோடை காலம் தொடங்கிய நிலையில் பல இடங்களில் 100 டிகிரிக்கும் மேல் வெயில் பதிவாகி வந்தது.இந்த நிலையில் புதன்கிழமை தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் கோடை மழை பெய்தது.

சென்னையில் கோடம்பாக்கம், எழும்பூர், நுங்கம்பாக்கம், அடையாறு, மயிலாப்பூர், புரசைவாக்கம் உள்ளிட்ட பல பகுதிகளில் மழை பெய்தது. இதேபோல, கோவை, கிருஷ்ணகிரி, தேனி, திருவாரூர் உள்ளிட்ட மாவட்டங்களிலும் கோடை மழை பெய்தது. தமிழகத்தில் பெய்து வரும் இந்த திடீர் மழைக்கு வெப்பச்சலனமே காரணம் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் பதிவான மழை அளவு (புதன்கிழமை காலை 8.30 மணி வரையிலான 24 மணி நேரம் - மில்லி மீட்டரில்): வால்பாறை - 70, பொள்ளாச்சி - 40, அரூர், தளி - 30, தாளவாடி - 20, ஆம்பூர், கோவை, நன்னிலம், தேன்கனிகோட்டை, ராயக்கோட்டை, ஊட்டி - 10

வானிலை முன்னறிவிப்பு: தமிழகம் மற்றும் புதுவையின் சில பகுதிகளில் வியாழக்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையை பொருத்தவரை மேகமூட்டமாக காணப்படும். சில பகுதிகளில் மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது.

## தீவன மூலப்பொருள்களின் விலையேற்றம் எதிரொலி: கோழிப் பண்ணைத் தொழிலில் ரூ.1000 கோடி இழப்பு

தீவன மூலப்பொருள்களின் மிகக் கடுமையான விலையேற்றத்தாலும், அதற்கேற்ப முட்டை விலை உயராததாலும் கடந்த 2012-13-ஆம் நிதியாண்டில் நாமக்கல் மண்டல கோழிப் பண்ணைத் தொழிலில் ரூ.1000 கோடி நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தெரிவித்துள்ளது.

பருவ மழை பொய்த்ததால் தீவன உற்பத்தி குறைந்து, கோழிப் பண்ணைகளுக்குத் தேவையான தீவன மூலப்பொருள்களின் விலை மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது. அதன்படி, கடந்த 2011-12-இல் சராசரியாக குவிண்டால் ரூ.1,221-க்கு விற்கப்பட்ட மக்காச்சோளத்தின் விலை 2012-13-ஆம் நிதியாண்டில் ரூ.1,392 ஆகவும், சோளா புண்ணாக்கு விலை குவிண்டால் ரூ.1,949-இல் இருந்து ரூ.3,411 ஆகவும் மிகக் கடுமையாக உயர்ந்துள்ளது. பெருமளவில் அதிகரித்து வரும் தீவன மூலப்பொருள்களின் விலையால் நாமக்கல் மண்டல கோழிப் பண்ணைகளுக்கு ரூ.1000 கோடி வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்தக் குழுவின் தலைவர் பி.செல்வராஜ், நாமக்கல் மண்டல கோழிப் பண்ணையாளர்களுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பது: 2012-13-ஆம் நிதியாண்டில் நாமக்கல் மண்டல கோழிப் பண்ணைகளில் மாதந்தோறும் சராசரியாக 32 லட்சம் முட்டை கோழிக்குஞ்சுகள் வீதம் ஆண்டு முழுவதும் சுமார் 384 லட்சம் முட்டை கோழிக்குஞ்சுகள் விடப்பட்டுள்ளன. கடுமையான தீவன மூலப்பொருள்களின் விலையேற்றம், அதற்கேற்ப உற்பத்தி செய்யப்பட்ட முட்டைகளுக்கு விலை கிடைக்காதது உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் கடந்த நிதியாண்டில் முட்டைக் கோழி ஒன்றுக்கு ரூ.60 வீதம், முட்டைக் கோழிப் பண்ணைத் தொழிலில் சுமார் ரூ.230.40 கோடி நஷ்டம் ஏற்பட்டதை நிபுணர்கள் உறுதிப்படுத்தி உள்ளனர்.

இதேபோல, கறிக்கோழித் தொழிலில் கிலோ ஒன்றுக்கு (உயிருடன்) ரூ.5.01 வீதம், கடந்த நிதியாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட 153.2 கோடி கிலோ கறிக்கோழிக்கு சுமார் ரூ.766.83 கோடிக்கு நஷ்டம் ஏற்பட்டிருப்பதும் தெரிய வந்துள்ளது. அதன்படி, நாமக்கல் மண்டல கோழிப் பண்ணைத் தொழிலில் கடந்த 2012-13-ஆம் நிதியாண்டில் மட்டும் சுமார் ஆயிரம் கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்பட்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. கட்டுப்படியாகாத முட்டை விலை காரணமாக கடந்த 6 மாதங்களாக பண்ணைகளில் குஞ்சு விடுவதும் குறைக்கப்பட்டுள்ளதால், வரும் மாதங்களில் முட்டை உற்பத்தி குறைந்தே காணப்படும்.

இந்தச் சூழ்நிலையில், கோழிப் பண்ணைத் தொழிலில் மேலும் நஷ்டம் ஏற்படுவதைத் தவிர்க்க, முட்டை பண்ணைக் கொள்முதல் விலையைக் கட்டாயமாக உயர்த்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுவின் "என் முட்டை என் விலை' என்ற கொள்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும். எனவே, பண்ணையாளர்கள் என்இசிசி அறிவிக்கும் விலையிலிருந்து முகவர் கமிஷனாக 25 காசுகள் மட்டுமே குறைத்து விற்பனை செய்ய வேண்டும். இதைக் கடைப்பிடிக்காவிட்டால் பண்ணைகளை மூட வேண்டிய அபாயம் ஏற்படலாம் என்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "வேளாண் ஆராய்ச்சிக்கு போதிய நிதி ஒதுக்கீடு இல்லை'

12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் வேளாண் துறை ஆராய்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லை என்று நாடாளுமன்ற நிலைக் குழு கூறியுள்ளது.

இப்போதைய சூழ்நிலையில் வேளாண்துறை ஆராய்ச்சிக்கு அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை அரசு உணரவில்லை என்று நாடாளுமன்ற நிலைக் குழு குற்றம்சாட்டியுள்ளது.

மத்திய வேளாண்மை துறை அமைச்சகத்தின் கீழ் செயல்பட்டு வரும் வேளாண் ஆராய்ச்சி, கல்வி அமைப்பு 12-வது ஐந்தாண்டு (2012 -17) திட்டத்தில் வேளாண் ஆராய்ச்சிக்கு ரூ.57,887 கோடி ஒதுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தது.

திட்டக் குழுவின் செயற்குழு ரூ.55,000 கோடியை ஒதுக்க பரிந்துரைத்தது. ஆனால் மத்திய அரசு ரூ.25,533 கோடி மட்டுமே ஒதுக்கியது.

இதனை வாசுதேவ் ஆச்சாரியா தலைமையிலான நாடாளுமன்ற நிலைக் குழு குறை கூறியுள்ளது. வேளாண் துறை ஆராய்ச்சிக்கு பரிந்துரைக்கப்பட்ட நிதியில் பெருமளவு நிதி குறைக்கப்பட்டுள்ளது. இதனால் இப்போது இத்துறையில் நடைபெற்று வரும் பல்வேறு ஆய்வுப் பணிகள் பாதிக்கப்படும். இதுவே வேளாண்துறையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

இது மிகவும் கவலைக்குரிய விஷயம். இது விஷயத்தில் எந்த அளவுக்கு கவனத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதில் மத்திய அரசு தோல்வியடைந்துவிட்டது.

எனவே வேளாண் துறை ஆராய்ச்சியின் முக்கியத்துவத்தை அத்துறை அமைச்சகம் மத்திய அரசிடம் தெளிவாக எடுத்துக்கூறி கூடுதல் நிதி ஒதுக்கீடு பெற வேண்டும்.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வேளாண்துறை எவ்வளவு பங்களிப்பு அளிக்கிறதோ, அதில் ஒரு சதவீத நிதி கூட ஒதுக்கப்படவில்லை.

இந்தியாவில் வேளாண்துறை ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்காக ஒதுக்கப்படும் ஒவ்வொரு ரூபாயும், 13 ரூபாயாக திரும்பி வருகிறது.

வேளாண் துறையின் ஆராய்ச்சியின் பலனாகத்தான் கோதுமை, நெல், பருத்தி உள்ளிட்டவற்றின் உற்பத்தி அதிகரித்துள்ளது. பருவநிலை மாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்னைகளை எதிர்கொள்ளும் வேளாண் துறையை புதிய ஆராய்ச்சி, மேம்பாட்டுப் பணிகள் மூலம்தான் காக்க முடியும் என்றும் நாடாளுமன்ற நிலைக்குழு கூறியுள்ளது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.04.2013 A.M**

---

## ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானியே எம்.எஸ். சுவாமிநாதன் பேச்சு

கன்னிவாடி:"ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானியே'என வேளாண் விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் பேசினார்.கசவனம்பட்டி அருகே கிட்டம்பட்டியில் வட்டார வளம்குன்றா வேளாண் மைய திறப்புவிழா நடந்தது. மையத் தலைவர் ராஜசேகர் தலைமைவகித்தார்.

வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் கட்டடத்தை திறந்து வைத்துபேசுகையில்," தற்போது இந்திய மக்கள்தொகை 120 கோடியாக உள்ளது. 2030ல் 150 கோடியாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இயற்கையின் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்ப, வேளாண்துறை பாதிப்புகளை சந்தித்து வரும் சூழலில், உணவு பற்றாக்குறை ஏற்பட வாய்ப்புள்ளது. தற்போது உணவு பஞ்சம் இல்லை. பணப்பஞ்சம் தான் உள்ளது. எனவே இதற்கேற்ப வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது முக்கியம். ஒவ்வொரு விவசாயியும் விஞ்ஞானி என்பதை அறிவு புரட்சியால் மட்டுமே உணர்த்த முடியும்,' என்றார். விழாவில், முன்னோடி வங்கி மேலாளர் அர்ஜூனன்முத்தையா, வேளாண்மை இணை இயக்குனர் சம்பத் உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

## தேனீக்களின் வியக்க வைக்கும் தகவல் பரிமாற்றம் ஜெல்லி மூலம் ராணியை உருவாக்கும் அதிசயம்

மேட்டூர்: அயல்மகரந்த சேர்க்கைக்கு காரணமாக இருக்கும் தேனீக்கள், பிரத்யோக ஜெல்லி மூலம் ராணி தேனீயை உருவாக்குவதும், பூக்கள் அதிகமுள்ள இடத்தை பிரத்யோக செய்கைகள் மூலம், இதர தேனீக்களுக்கு தெரிவிப்பதும் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது.சேலம் மாவட்டத்தில், தோட்டக்கலைத்துறை சார்பில், நான்கு மாதிரி கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதில், மேச்சேரி ஒன்றியம், வெள்ளாறு கிராமமும் ஒன்றாகும். சமீபகாலமாக பூக்களில் மகரந்தத்தை சேகரிக்கும் பூச்சிகள் எண்ணிக்கை குறைந்து வருவதால், காய், கனிகள் உற்பத்தி குறைந்து வருகிறது.அயல்மகரந்த சேர்க்கைக்கு உதவும் தேனீக்கள் உற்பத்தியை அதிகரிக்க தோட்டக்கலைத்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்காக தோட்டக்கலை துறை சார்பில் வெள்ளாறு கிராமத்தை சேர்ந்த, 20 விவசாயிகளுக்கு ஒருவாரத்துக்கு முன், 50 தேனீ பெட்டிகள்

வழங்கப்பட்டுள்ளது. தேனீக்கள் மூலம் தோட்டக்கலை பயிர்கள் உற்பத்தி அதிகரிக்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது.மேச்சேரி தோட்டக்கலை அலுவலர் கூறியதாவது:தேனீக்கள் வாழ்க்கை சுவாரஸ்யம் மிகுந்தது. ஒரு கூட்டில் ஒரு ராணி தேனீ, 20 ஆண் தேனீக்கள் மட்டுமே இருக்கும். மற்றவை வேலைக்கார தேனீக்களாகும். வேலைக்கார தேனீக்கள் அனைத்துமே கூட்டில் இருந்து வெகுதூரம் சென்று, பூக்களில் மதுவை உறிஞ்சு வரும். ஆண் தேனீக்கள் கூட்டிலே இருக்கும்.மேலும், ராணி தேனீ மட்டுமே முட்டையிடும். முட்டை மற்றும் குஞ்சுகளை வேலைக்கார தேனீக்கள் பாராமரிக்கும். வேலைக்கார தேனீக்கள் முட்டையிடாது. புதிதாக ஒரு தேன் கூடு உருவாக்குவதற்காக, ஒரு கூட்டில் இருந்து ராணி தேனீயை பிரித்து விட்டால், கூட்டில் உள்ள வேலைக்கார தேனீக்கள், "ராயல் ஜெல்லி' எனப்படும் ஒரு திரவத்தை சுரந்து, அதை கூட்டில் உள்ள இரண்டு அல்லது மூன்று குஞ்சுகளுக்கு வழங்கும்.ராயல்ஜெல்லியை உட்கொள்ளும் குஞ்சுகள் ராணி தேனீயாக உருவெடுக்கும். ஒரு ராணி தேனீ தயாரானதும், உபரியாக உருவாக்கிய இதர இரு ராணி தேனீக்களின் கழுத்தை அறுத்து, வேலைக்கார தேனீக்கள் கொன்று விடும். பின் புதிய ராணி தேனீ கட்டுப்பாட்டில் இதர தேனீக்கள் செயல்படும்.பூக்கள் அருகாமையில் இருப்பதை, ஒரு தேனீ வட்டவடிவமாக சுற்றி சக தேனீக்களுக்கு தெரிவிக்கும். பூக்கள் வெகுதூரத்தில் இருந்தால், எட்டு வடிவில் சுற்றி தெரிவிக்கும். தேனீக்களின் தகவல் பறிமாற்றம் ஆச்சரியமான ஒன்று. தேனீக்கள் வளர்ப்பதால் தேன் மூலம் வருமானம், தங்கள் நிலத்தில் காய்கறி, பழங்கள் உற்பத்தி அதிகரிக்கும் என விவசாயிகளுக்கு இரட்டிப்பு பலன் கிடைக்கிறது.

## விவசாயிகள் சந்தைக்கு போவதை நிறுத்த வேண்டும் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேச்சு

சேலம்: ""விவசாயிகள் சந்தைக்கு போவதை நிறுத்த வேண்டும். வாங்கும் போதும், விற்கும் போதும் விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர்,'' என இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.சேலம், சோனா கல்லூரியில் தளிர் அமைப்பு சார்பில், "உழவுக்கும் உயிர் உண்டு' என்ற தலைப்பில், இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் நடந்தது. இதில், தாவரவியல்துறை தலைவர் லதா வரவேற்றார். நபார்டு வங்கி உதவிப்பொதுமேலாளர் ராஜு முன்னிலை வகித்தார்.இதில் கலந்து கொண்ட இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது:இப்போது, மாணவர்களிடமும் விவசாயம் குறித்த ஆர்வம் அதிகரித்துள்ளது. வெறும் சாப்பாடு மட்டுமே சாப்பிட்டு வந்தவர்கள், இன்று சாமை, தினை, குதிரை வாலி, என பழங்கால உணவுகளை சாப்பிடும் நிலை உருவாகியுள்ளது.பிரச்னைகள் பூதாகரமாக இருந்தாலும், அதற்கான தீர்வுகள் மிக எளிதாகவே

இருக்கும். இன்று, எல்லோருமே இயற்கையை பற்றி பேச ஆரம்பித்துவிட்டனர். மாணவர்கள், வெளியில் உள்ள புத்தகங்களையும் படிக்க வேண்டும். நீர் நிலைகள் ஆக்ரமிப்பால், நீராதாரம் குறைந்து விட்டது, என குற்றம் சாட்டிக் கொண்டுள்ளோம். பெரும்பாலான ஏரி, குளம் உள்ளிட்ட இடங்களை ஆக்ரமித்து அரசாங்க கட்டிடமாகவோ, பஸ் ஸ்டாண்டோ கட்டப்பட்டுள்ளது. இப்படியிருக்கும் நிலையில், விவசாயிகளை காப்பாற்ற யாரும் வரப்போவதில்லை. நம்மை நாமேதான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.இயற்கை அளித்ததை, நாம் திருப்பியளிக்க வேண்டும். நெல் அறுவடை செய்தால், அதன் தானியத்தை பெற்றுக்கொண்டு, வைக்கோலை வயிலில் பரப்பிவிட வேண்டும். அது மக்கி மண்ணின் வளமாக மாறும். வேறு எதுவும் தேவையில்லை.உரம் என்ற பெயரில், மண்ணுக்கு உப்பை கொடுப்பதால், அது கட்டாந்தரையாக மாறிவிடும். விவசாயிகளுக்கு உரம், விதை, கருவி உள்ளிட்ட விற்பனை செய்பவர்களும், விவசாய பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரிகளும் கோடீஸ்வரானாக உள்ளார்கள். ஆனால், விவசாயி கடனாளியாகவே இருக்கிறான்.அதனால் தான் கஷ்டப்பட்டது போதும், மகன் படித்து வேறு வேலைக்கு போகட்டும், என நினைக்கின்றனர். விவசாய நிலங்களை, கம்பெனிகளுக்கு தாரை வார்க்க நினைக்கின்றனர். உலகுக்கு உணவு கொடுக்கும் பணி மேன்மையானது. அதை செய்யும் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உள்ளது. விவசாயிகள் சந்தைக்கு போவதை நிறுத்த வேண்டும். வாங்கும் போதும், விற்கும் போதும் விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர். அனைவரிடமும் பரவிக்கிடக்கும் அறிவை திரட்டி, மக்கள் பயன்பெற கொடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

## வாட்டும் கோடை வெயிலால்...விலை உயர்வு காய்கறிகள் உற்பத்தி பாதிப்பு

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில், கோடை வெயில் வாட்டி எடுத்து வரும் நிலையில், கோடை மழையும் கை கொடுக்காத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், உள்ளூர் காய்கறிகள் விலை உயர்ந்துள்ளது.விவசாயத்தை பிரதானமாக கொண்ட தர்மபுரி மாவட்டத்தில், நெல், வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களுக்கு அடுத்தபடியாக தோட்டக்கலை பணப்பயிர்களான காய்கறிகள் சாகுபடியில் விவசாயிகள் அதிகம் கவனம் செலுத்தி வருகின்றனர்.இறவை பாசன பகுதியில், 60 முதல், 70 சதவீதம் விவசாயிகள் காய்கறி சாகுபடி செய்து வருகின்றனர். இங்கு தக்காளி, வெண்டை, பீர்க்கன், முள்ளங்கி, கத்தரி, அவரை, சின்ன வெங்காயம், கோஸ், பீன்ஸ், காலிஃப்ளவர், உருளை உள்ளிட்ட உள்ளூர் காய்கறிகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது.அறுவடை செய்யப்படும் காய்கறிகளை விவசாயிகள் உழவர் சந்தைகள் மற்றும்

வாரம் தோறும் கூடும் சந்தைகளிலும், வீதிகளில் நேரடி விற்பனையிலும் விவசாயிகள் களம் இறங்கி விற்பனை செய்கின்றனர். இதனால், விவசாயிகளுக்கு லாபம் கிடைப்பதால், பெரும்பாலான சிறு காய்கறி விவசாயிகள் நேரடி விற்பனையில் ஈடுபட்டு வருகின்றனர்.பெரிய விவசாயிகள் உற்பத்தி செய்யப்படும் காய்கறிகளை பாலக்கோடு, தர்மபுரி, பென்னாகரம், காரிமங்கலம், அரூர், பாப்பிரெட்டிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மொத்த விற்பனை மண்டிகளுக்கு எடுத்து சென்று கமிஷன் அடிப்படையில் வெளி மாவட்ட வியாபாரிகளுக்கு விற்பனை செய்து வருகின்றனர்.இங்கு உற்பத்தி செய்யப்படும் காய்கறிகள் சென்னை, பெங்களூரு, வேலூர், சேலம், கோவை, ஈரோடு உள்ளிட்ட பகுதிகளுக்கு செல்கிறது. தக்காளியை பொறுத்த வரையில், ஆண்டு முழுவதும் உற்பத்தி செய்யப்படுவதால், இங்குள்ள பாலக்கோடு, பென்னாகரம், தர்மபுரி தக்காளி சந்தைகளில் இருந்து தென் மாவட்டங்களுக்கு அதிக அளவில் தக்காளி விற்பனைக்கு செல்கிறது.உள்ளூர் தேவையை மிஞ்சி, 40 சதவீதம் உற்பத்தி காய்கறிகள் வெளி மாநிலங்களுக்கு விற்பனைக்கு செல்கிறது. கடந்த இரண்டு மாதமாக கோடை வெயில் வாட்டி எடுக்கும் நிலையில், இறவை பாசன பகுதி கிணறுகள் அனைத்தும் நீர் இன்றி வறண்டு போனது.தண்ணீர் ஊற்று ஊற, ஊற மோட்டார் மூலம் தண்ணீர் பாய்ச்சி கடந்த ஒரு மாதமாக விவசாயிகள் காய்கறி பயிர்களை பாதுகாத்து வந்தனர். தொடரும் கோடை வெயில் காரணமாக போதிய தண்ணீர் வசதியின்றி, காய்கறி பியரர்கள் வாட துவங்கி விட்டன.இதனால், சந்தைக்கு காய்கறிகளின் விற்பனை வரவு, 40 முதல், 50 சதவீதம் வரையில் சரிவடைந்துள்ளது. வெளி மாவட்டங்களுக்கு காய்கறி தோவைகள் அதிகம் உள்ள நிலையில், உள்ளூர் சந்தைகளில் காய்கறிகளின் விலைகள் பல மடங்கு உயர்ந்துள்ளது.இறவை பாசனத்தை பொறுத்த வரையில் ஆண்டுதோறும் பெய்யும் கோடை மழையை கொண்டு நிலத்தடி நீர் மட்டம் ஓரளவுக்கு கிடைக்கும். ஆனால், இந்தாண்டு கோடை மழையும் ஏமாற்றியதால், காய்கறி பயிர்களை பாதுகாக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. விலை உயர்வு: உற்பத்தி குறைவை தொடர்ந்து உள்ளூர் சந்தைகளில், தக்காளி, வெண்டை, கத்தரி, அவரை, பீர்க்கன் உள்ளிட்டவைகள் கிலோ, 20 ரூபாய்க்கும், வெங்காயம், 34 ரூபாய் முதல், 38 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது.கேரட் கிலோ, 38க்கும், பீன்ஸ், 74 ரூபாய்க்கும், பீட்ரூட், 34 ரூபாய்க்கும், பச்சை பட்டாணி கிலோ, 105 ரூபாய்க்கும், காலிஃப்ளவர் ஒன்று, 20 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. உருளை கிலோ 24 ரூபாய்க்கும், பெரிய வெங்காயம், 16 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. காய்கறிகள் விலை ஏற்றத்தால், நடுத்தர மக்கள் காய்கறிகள் வாங்க முடியாமல் சிரமத்துக்குள்ளாகி வருகின்றனர்.

## ராசிபுரத்தில் திடீர் மழை பொதுமக்கள் மகிழ்ச்சி

ராசிபுரம்: நாமக்கல் மாவட்டத்தில், சில நாட்களாக கடும் வெயில், மக்களை வாட்டி வதைக்கிறது. குறிப்பிட்ட நேரத்துக்கு மேல், வெளியில் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.இந்நிலையில், ராசிபுரம் பகுதியில், நேற்று மதியம், 1 மணிக்கு, வானம் திடீரென மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதை தொடர்ந்து, 1.30 மணிக்கு, திடீரென இடியுடன் கனமழை பொழிந்தது.ராசிபுரம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில், ஆங்காங்கே பல்வேறு இடங்களில் மழை பெய்தது. ஒரு மணி நேரம் நீடித்த இம்மழையால், ராசிபுரம் நகராட்சி பகுதிகளில், மழை நீருருடன், சாக்கடை நீரும் சங்கமித்து, சாலைகளில் ஆறாக ஓடியது. அதனால், அப்பகுதியில் துர்நாற்றம் வீசியது. கனமழையால், வெயிலின் தாக்கம் குறைந்து, பூமி குளிர்ந்தது. அதனால், மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## வேளாண் பொருட்கள் ஏற்றுமதி அவசியம்: கலெக்டர் அறிவுறுத்தல்

நாமக்கல்: ""வேளாண் பொருட்கள் சத்தைப்படுத்த ஏதுவாக, உள்ளூர் விற்பனை மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்த வேண்டும்,'' என, நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் பேசினார்.நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், சிறு விவசாயிகள், வேளாண் வணிக நட்பமைப்பு முன்னோடி விவசாயிகள் மற்றும் தொழில் முனைவோருக்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது. மாவட்ட கலெக்டர் ஜகந்நாதன் தலைமை வகித்து பேசியதாவது:வேளாண் வணிக நட்பமைப்பு வேளாண் மற்றும் வேளாண் வணிக செயல்திட்டங்களை சிறு விவசாயிகளிடம் சென்றடைய செய்ய வேண்டும். வேளாண் பொருட்கள் சத்தைப்படுத்த ஏதுவாக, உள்ளூர் விற்பனை மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்த வேண்டும். வேளாண் மற்றும் வேளாண் சார்ந்த தொழில்களை முனைப்புடன் செயலாக்க உதவ வேண்டும்.விவசாயிகள், உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யும் உரிமையை, விவசாயிகளிடம் ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான், லாபகரமான முறையில், பொருட்களை விற்பனை செய்ய முடியும். விவசாயிகள், தாங்கள் உற்பத்தி செய்த பொருட்களை எவ்வாறு வணிகம் செய்வது என்பதை தெரிந்து கொள்வதற்கும், இந்த அமைப்பு உதவியாக இருக்கும். விவசாயிகள் எந்த திட்டம் மூலம் உதவி பெற்றால், அது விவசாயத்திற்கு உதவியாக இருக்கும் என்பதை நன்கு அறிந்திருக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.முன்னோடி வங்கி மேலாளர் அறிவழகன், உதவி பொது மேலாளர் பூவராகவன், மாவட்ட தொழில் மைய பொதுமேலாளர் ராசுமணி, வேளாண் வணிக துணை இயக்குனர் விஸ்வநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

## மேட்டூர் சர்க்கார் தோட்டத்தில் வறட்சி தீவனப்புல் சாகுபடி கடும் பாதிப்பு

மேட்டூர்: மேட்டூர் நகராட்சி சர்க்கார் தோட்டத்தில், வறட்சியால் தீவனபுல் சாகுபடி பாதித்துள்ளது.மேட்டூர் நகராட்சிக்கு சொந்தமான கால்வாய் கரையோரம் சர்க்கார் தோட்டம் என்ற பெயரில், 20 ஏக்கர் சாகுபடி நிலம் உள்ளது. இந்த நிலத்தில் தென்னை மற்றும் தீவனபுல் சாகுபடி செய்யப்படுகிறது. நிலத்தை குத்தகைக்கு எடுக்கும் ஒப்பந்தாரர்கள் தீவனபுல் சாகுபடி செய்து, விவசாயிகளுக்கு விற்பனை செய்கின்றனர்.மேட்டூர் கால்வாயில் பாசனத்துக்கு நீர்திறக்கும் போது, அந்த நீரின் மூலம் நகராட்சி சர்க்கார் தோட்டத்தில், தீவனபுல் சாகுபடி செய்யப்படும். கடந்த ஆண்டு வறட்சி காரணமாக, மேட்டூர் அணையில் இருந்து கால்வாயில் நீர்திறக்கவில்லை.தற்போது கால்வாய் வறண்டு விட்டதாலும், மேட்டூர் நகராட்சி மூலம் சுத்திகரிப்பு செய்யப்பட்டு, சர்க்கார் தோட்டத்துக்கு சப்ளை செய்யும் செப்டிக் டேங்க் கழிவுநீர் வரத்தும் குறைந்து விட்டது. இதனால், 20 ஏக்கர் நிலத்தில் தீவனபுல் சாகுபடி செய்த சர்க்கார் தோட்டத்தில் தற்போது, 13 ஏக்கர் நிலத்தில் மட்டுமே தீவனபுல் சாகுபடி செய்யப்படுகிறது.நடப்பாண்டு ஏற்பட்ட வறட்சி காரணமாக, மேட்டூர் நகராட்சி எல்லைக்குள் கால்நடைகள் வளர்ப்பவர்கள் அனைவரும் சர்க்கார் தோட்டத்தில் விற்பனை செய்யும் தீவனபுல்லையே நம்பியுள்ளனர்.சர்க்கார் தோட்டத்திலும் வறட்சியால் தீவனபுல் சாகுபடி குறைந்து விட்டதால், ஒரு ரூபாய், 30 காசுக்கு விற்பனை செய்த ஒரு கட்டு தீவனபுல் தற்போது, இரண்டு ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. தண்ணீர் பற்றாக்குறையால் தீவனப்புல் உற்பத்தி பாதித்துள்ளது, ஒப்பந்ததாரரை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

## வறட்சியால் அதிகரித்த தண்ணீர் வண்டிகள்

நங்கவள்ளி: கடும் வறட்சியால், நங்கவள்ளி பகுதியில், தண்ணீர் வினியோகம் செய்யும் வண்டிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.தற்போது நிலவும் கடும் வறட்சியால், நங்கவள்ளி பகுதியில், நிலத்தடி நீர்மட்டம், படுபாதாளத்துக்கு சென்று விட்டது. அதனால், ஆழ்துளை கிணறு உள்ளவர்களும், குடிநீர் மற்றும் பிறத் தேவைகளுக்கு, தண்ணீரை, விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.அவர்கள், 4,800 லிட்டர் தண்ணீர், 600 ரூபாய்க்கு வாங்குகின்றனர். தண்ணீரை விலைக்கொடுத்து வாங்குவோரின் எண்ணிக்கை, நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், தண்ணீர் வினியோகம் செய்யும் வண்டிகளின் எண்ணிக்கையும், அதிகரித்துள்ளது.தற்போது, நங்கவள்ளி, ஜலகண்டாபுரம் பகுதியில், 30 தண்ணீர் வண்டிகள் ஓடுகின்றன.

## விவசாயிகள் சந்தைக்கு போவதை நிறுத்த வேண்டும் இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேச்சு

சேலம்: ""விவசாயிகள் சந்தைக்கு போவதை நிறுத்த வேண்டும். வாங்கும் போதும், விற்கும் போதும் விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர்,'' என இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.சேலம், சோனா கல்லூரியில் தளிர் அமைப்பு சார்பில், "உழவுக்கும் உயிர் உண்டு' என்ற தலைப்பில், இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் நடந்தது. இதில், தாவரவியல்துறை தலைவர் லதா வரவேற்றார். நபார்டு வங்கி உதவிப்பொதுமேலாளர் ராஜூ முன்னிலை வகித்தார்.இதில் கலந்து கொண்ட இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது:இப்போது, மாணவர்களிடமும் விவசாயம் குறித்த ஆர்வம் அதிகரித்துள்ளது. வெறும் சாப்பாடு மட்டுமே சாப்பிட்டு வந்தவர்கள், இன்று சாமை, தினை, குதிரை வாலி, என பழங்கால உணவுகளை சாப்பிடும் நிலை உருவாகியுள்ளது.பிரச்னைகள் பூதாகரமாக இருந்தாலும், அதற்கான தீர்வுகள் மிக எளிதாகவே இருக்கும். இன்று, எல்லோருமே இயற்கையை பற்றி பேச ஆரம்பித்துவிட்டனர். மாணவர்கள், வெளியில் உள்ள புத்தகங்களையும் படிக்க வேண்டும். நீர் நிலைகள் ஆக்ரமிப்பால், நீராதாரம் குறைந்து விட்டது, என குற்றம் சாட்டிக் கொண்டுள்ளோம். பெரும்பாலான ஏரி, குளம் உள்ளிட்ட இடங்களை ஆக்ரமித்து அரசாங்க கட்டிடமாகவோ, பஸ் ஸ்டாண்டோ கட்டப்பட்டுள்ளது. இப்படியிருக்கும் நிலையில், விவசாயிகளை காப்பாற்ற யாரும் வரப்போவதில்லை. நம்மை நாமேதான் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.இயற்கை அளித்ததை, நாம் திருப்பியளிக்க வேண்டும். நெல் அறுவடை செய்தால், அதன் தானியத்தை பெற்றுக்கொண்டு, வைக்கோலை வயிலில் பரப்பிவிட வேண்டும். அது மக்கி மண்ணின் வளமாக மாறும். வேறு எதுவும் தேவையில்லை.உரம் என்ற பெயரில், மண்ணுக்கு உப்பை கொடுப்பதால், அது கட்டாந்தரையாக மாறிவிடும். விவசாயிகளுக்கு உரம், விதை, கருவி உள்ளிட்ட விற்பனை செய்பவர்களும், விவசாய பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரிகளும் கோடீஸ்வரானாக உள்ளார்கள். ஆனால், விவசாயி கடனாளியாகவே இருக்கிறான்.அதனால் தான் கஷ்டப்பட்டது போதும், மகன் படித்து வேறு வேலைக்கு போகட்டும், என நினைக்கின்றனர். விவசாய நிலங்களை, கம்பெனிகளுக்கு தாரை வார்க்க நினைக்கின்றனர். உலகுக்கு உணவு கொடுக்கும் பணி மேன்மையானது. அதை செய்யும் விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் நிலை உள்ளது. விவசாயிகள் சந்தைக்கு போவதை நிறுத்த வேண்டும். வாங்கும் போதும், விற்கும் போதும் விவசாயிகள் ஏமாற்றப்படுகின்றனர். அனைவரிடமும் பரவிக்கிடக்கும் அறிவை திரட்டி, மக்கள் பயன்பெற கொடுக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார்.

## மிளகு, கிராம்பு விளைச்சல் அதிகரிப்பு விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

பெத்தநாயக்கன்பாளையம்: சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் அருகே, கல்வராயன்மலை கிராமங்களில், மிளகு, கிராம்பு விளைச்சல் அதிகரிப்பு மற்றும் விலை உயர்வால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.ஆத்தூர் அடுத்த, பெத்தநாயக்கன்பாளையம் யூனியன், கல்வராயன்மலையில் உள்ள, வடக்குநாடு, தெற்கு நாடு, கீழ்நாடு, மேல்நாடு, கருமந்துறை, அடியனூர், குன்னூர், மணியார்குண்டம், கரியக்கோவில் உள்ளிட்ட பகுதிகளில், மா, பலா, முந்திரி, மிளகு, கிராம்பு, வாழை உள்ளிட்டவை பிரதான விவசாயமாக செய்து வருகின்றனர்.பாக்கு, தென்னை, சில்வர் ஓக் மரத் தோப்புகள் அதிகளவில் உள்ளன. இந்த மரங்களில், மிளகு செடிகள் ஏற்றி விட்டு, பயிர் செய்து வருகின்றனர். அதில், கல்வராயன்மலை கிராமங்களில், 400 ஏக்கருக்கு மேல் மிளகு, கிராம்பு சாகுபடி செய்துள்ளனர். இங்கு விளைவிக்கப்படும் மிளகு, காரம் மிகுந்தும், கிராம்பு வாசனை மிகுந்து இருப்பதால், வியாபாரிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது.தற்போது, மிளகு விளைச்சல் அதிகரித்துள்ளதோடு, விலையும் கணிசமாக உயர்ந்துள்ளதால், விவசாயிகள் பெரிதும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கருமந்துறையை சேர்ந்த மிளகு, கிராம்பு விவசாயிகள் கூறியதாவது:கல்வராயன்மலை பகுதியில், சில்வர் ஓக், பாக்கு மரத் தோப்புகள் அதிகளவில் உள்ளன. இதில், ஊடு பயிர்களாக மிளகு பயிரிடப்பட்டுள்ளது. பன்னியூர், கரிமுண்டா ரக மிளகுகள், பாக்கு, தென்னை மரத்தின் கீழ் செடிகள் நடப்படும்.இந்த மிளகு செடிகள், மூன்று ஆண்டுகளில் நன்கு வளர்ந்து, காய்கள் பிடிக்க துவங்கிவிடும். தற்போது, செடிக்கு பச்சை மிளகுகள், மூன்று கிலோ வரை கிடைக்கிறது. கிலோ மிளகு, 300 ரூபாய் வரை விற்பதால், வியாபாரிகள் அதிகளவில் வாங்கிச் செல்கின்றனர்.மிளகு பயிர், 15 முதல், 20 ஆண்டுகள் வரை, விளைச்சல் இருக்கும் என்பதால், மலை பகுதி விவசாயிகளுக்கு நல்ல வருவாய் தரும் பயிராக இருந்து வருகிறது. அதேபோல், பல் வலி, வாசனைக்கும் பயன்படும் மருத்துவ குணம் வாய்ந்த கிராம்பு சாகுபடி கணிசமாக உள்ளது. கிராம்பு கிலோ, 600 முதல், 700 ரூபாய் வரை விற்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினர்.

## வெளி மாநிலங்களுக்கு செல்லும் கோரை பாய் விலை கிடைக்காமல் உற்பத்தியாளர்கள் அவதி

சேலம்: சேலம், ஓமலூரில் இருந்து, கேரள, கர்நாடகா, ஆந்திர மாநிலங்களுக்கு கோரைப்புல் பாய்கள் அனுப்பப்பட்டாலும், உரிய விலை கிடைக்காமல் உற்பத்தியாளர்கள் அவதிப்படுகின்றனர்.

ஓமலூர், சிந்தாமணியூர், ஊமாண்டம்பட்டி, காருவள்ளி, அரசனூர், தாராபுரம், மேச்சேரி, பூசாரிப்பட்டி உள்பட, 50க்கும் மேற்பட்ட கிராமங்களில், ஆயிரத்துக்கும் மேற்பட்ட விசைத்தறிகளில், கோரைப்புல் பாய்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பல ஆண்டுகளாக இந்த

தொழிலை செய்து வருபவர்கள், மின்சார தடை, ஆட்கள் பற்றாக்குறை போன்ற பிரச்னையால் தவிக்கின்றனர். மேலும், பாய்களுக்கு உரிய விலை கிடைக்காத நிலை உள்ளதாகவும் கூறுகின்றனர்.

பாய் வியாபாரிகள் கூறியதாவது:

திருச்சி, வேலூர், கரூர் மாவட்டங்களில் இருந்து கோரைப்புற்கள் வாங்கப்படுகிறது. ஆறு கட்டு கொண்ட கோரைப்புல் கடந்தாண்டு, 480 ரூபாய் இருந்தது. இந்தாண்டு, 680 ரூபாயாக உயர்ந்து விட்டது. கோரைப்புற்களுக்கு வண்ணம் தீட்டும் சாயம் ஒரு கிலோ, 800 முதல், 900 ரூபாய்க்கு வாங்குகிறோம். கடந்தாண்டை விட, ஒரு கிலோவுக்கு, 100 ரூபாய் சாயம் விலை கூடியுள்ளது. இதுதவிர கோரைப்புல்களை அடுக்கி வைத்தல், கோரைப்புற்களுக்கு சாயமேற்றுதல், விசைத்தறி மூலம் பாய்களை உற்பத்தி செய்தல், பாய்களுக்கு முடிச்சு போடுதல் என, பல பணிகளுக்கு கூலி கொடுக்க வேண்டியுள்ளது. தற்போது கோரை பாய்களை கட்டிட பணிகளுக்கு அதிகளவு பயன்படுத்துகின்றனர். கேரளா, ஆந்திரா, கர்நாடக மாநிலங்களுக்கு கோரைப்பாய்கள் அனுப்பப்படுகிறது. திருமண விசேஷ காலங்களில் கோரைப் பாய்களுக்கு கிராக்கி ஏற்படும். தற்போது, கோரைப்பாய்களுக்கு உரிய விலை கிடைக்காத நிலையே காணப்படுகிறது. கடந்தாண்டை விட, இந்தாண்டு பாய்களின் விற்பனை குறைந்துள்ளது.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### வளத்தியில் உழவர் பெருவிழா

அவலூர்பேட்டை:மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தியில் உழவர் பெருவிழா நடந்தது.ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மாவட்ட கவுன்சிலர் மோகன், துணை தலைவர் பாண்டுரங்கன் முன்னிலை வகித்தனர். வேளாண் உதவி இயக்குனர் பழனிவேலு வரவேற்றார். இதில், தமிழக அரசு வழங்கும் வேளாண் திட்டங்கள், தொழில் நுட்பங்கள், துல்லிய பண்ணை, விதை தேர்வு உள்ளிட்டவை குறித்து அதிகாரிகள் விளக்கினர். விவசாயி ஒருவருக்கு 50 சதவீதம் மானியத்தில் 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள, களை எடுக்கும் பவர் கோனாவீடர் கருவி வழங்கப்பட்டது. தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் சீனிவாசன், விதை சான்று அலுவலர் நாராயணசாமி, உதவி செயற்பொறியாளர் பன்னீர்செல்வம், உதவி வேளாண் அலுவலர்கள் மற்றும் கிராம மக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். உதவி வேளாண் அலுவலர் தமிழ் மணி நன்றி கூறினார்.

### சின்னசேலத்தில் கோடை மழை சாகுபடி விவசாயிகள் மகிழ்ச்சி

சின்னசேலம்:சின்னசேலம் பகுதியில் நேற்று பெய்த பலத்த மழையால் கிராம மக்கள் மற்றும் நகர மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.
விழுப்புரம் மாவட்டம், சின்னசேலம் தாலுகா தொட்டியம், எலவடி, குரால் உள்ளிட்ட 85 கிராம மக்கள் விவசாயத்தை முக்கிய தொழிலாக செய்து வருகின்றனர். இந்தாண்டு பருவமழை பொய்த்ததால் இப்பகுதியில் விவசாயம் முற்றிலும் பாதிப்படைந்தது.
நகர மக்களுக்கும் குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டது.
கிராம பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தில் சிறு பகுதியில் மட்டுமே கிணற்று நீரை பயன்படுத்தி மரவள்ளி, மக்காசோளம், கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர்.
தொடர்ந்து வறட்சி நிலவி வந்ததால் விவசாயிள் சாகுபடி செய்துள்ள பயிர்கள் கருகும் நிலை உருவாகியது.
இந்நிலையில் சின்னசேலத்தில் நேற்று மாலை 5 மணிக்கு பலத்த கோடைமழை பெய்ததால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## கொளுத்தும் கோடை வெயிலால் கரும்பு பயிர்கள் கருகும் அவலம்

சங்கராபுரம்:சங்கராபுரம் பகுதியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கோடை வெயிலால் கரும்பு பயிர்கள் காய்ந்து கருகி வருகிறது.
சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழிலாக இருந்து வருகிறது. ஏரிப்பாசனம், ஆற்று பாசன வசதி இல்லாததால் பல விவசாயிகள் கிணற்று பாசனத்தை நம்பியுள்ளனர்.
ஆட்கள் பற்றாக்குறை, மின்தடை இவற்றால் நெல் பயிர் செய்து வந்த விவசாயிகள் மாற்றுபயிரான கரும்பு பயிருக்கு மாறினர்.
நெடுமானூர், சோழம்பட்டு, மூரார்பாளையம், ஆரூர், திம்மநந்தல், கடுவனூர், அத்தியூர், பொய்குனம், அரியலூர், கானாங்காடு, ராவுத்தநல்லூர் , வடபொன்பரப்பி, கொள்ளியூர், குப்பம் ஆகிய பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பில் விவசாயிகள் கரும்பு சாகுபடி செய்திருந்தனர்.
இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் ஏரி, குளங்கள் வற்றியது.
இதனால் கிணறுகளில் நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்து விவசாயத்திற்கு போதுமானதாக இல்லை. கிணற்றில் நீர் சுரக்கும் போது விவசாயிகள் பயிர்களுக்கு தண்ணீர் இறைத்து வருகின்றனர்.
கொளுத்தும் கோடை வெயிலால் கிணறுகளில் போதுமான தண்ணீர் இல்லாதால் கரும்பு பயிர்கள் காய்ந்கின்றன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## உற்பத்தியை பெருக்குவது குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு

பேட்டை கண்டிகை : உழவர் பெருவிழாவில், விவசாயிகளுக்கு உற்பத்தியை பெருக்குவது குறித்து, கலை நிகழ்ச்சிகள் நடத்தி, விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.
பள்ளிப்பட்டு ஒன்றியத்தில், இம்மாதம், 14ம் தேதி முதல், அடுத்த மாதம் 20ம் தேதி வரை உழவர் பெருவிழா ஒவ்வொரு ஊராட்சியிலும் நடைபெற உள்ளது.பேட்டை கண்டிகை கிராமத்தில் ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணியன் தலைமையில் நடந்த, உழவர் பெருவிழாவில், கலை நிகழ்ச்சி மூலம் திருந்திய நெல் சாகுபடி குறித்து, விவசாயிகளுக்கு எடுத்து கூறப்பட்டது.
இந்த விழாவில், பள்ளிப்பட்டு உதவி வேளாண்மை இயக்குனர் முபாரக் பாஷா, விதை நேர்த்தி செய்வதன் மூலம், விளையும் பயிர்களுக்கு பரவும் நோய்களை கட்டுப்படுத்துதல், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி குறித்தும், உரமுடன் கலந்து சொட்டுநீர் பாசனம் குறித்தும், களையெடுப்பதற்கு உபகரணம் பயன்படுத்துவது குறித்தும், இலை வண்ண அட்டை மூலம் பயிர்களுக்கு தகுந்த படி உரம் போடுதல் குறித்தும், விவசாயிகளுக்கு செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.
விதை சான்று அலுவலர் செண்பகவல்லி, விதைகளின் நிலை தரமானதாக உள்ளதா என்பதையும், விதை உற்பத்தி செய்வது குறித்தும் விளக்கம் கூறினார்.

## மாந்தோப்பில் ஊடுபயிராக மிளகாய் சாகுபடி செங்காடு விவசாயிகள் ஆர்வம்

செங்காடு : செங்காடு கிராமத்தில், மாந்தோப்பில் ஊடுபயிராக மிளகாய் செடி, கத்தரி செடி பயிரிடப்பட்டு வருகிறது.
ஸ்ரீபெரும்புதூர் - திருவள்ளூர் சாலையில், செங்காடு கிராமம் அமைந்துள்ளது. இங்கு, 2,500க்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இப்பகுதியில், விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. கடந்த சில ஆண்டுகளாக, நீர் பற்றாக்குறை காரணமாக, இங்குள்ள விவசாயிகள், நெல் பயிருக்கு மாற்றுப் பயிராக, சவுக்கு, மா ஆகியவற்றை பயிரிட துவங்கியுள்ளனர்.
இந்நிலையில், தோட்டக் கலைத் துறை அதிகாரிகளின் ஆலோசனைப்படி, மாந்தோட்டத்தில் ஊடுபயிராக மிளகாய், கத்திரிக்காய் போன்றவற்றை சாகுபடி செய்து வருகின்றனர்.
ஊடுபயிர்
இதுகுறித்து, அப்பகுதி விவசாயி சுந்தரவரதன் கூறியதாவது:
எனக்கு சொந்தமான நிலத்தில், ஒரு ஏக்கர் பரப்பளவில், மா மரங்களின் இடையே, சொட்டுநீரை பயன்படுத்தி, ஊடுபயிராக, கத்திரிக்காய், மிளகாய் மற்றும் பப்பாளி ஆகியவற்றை பயிரிட்டு வருகிறேன். சொட்டு நீர் பாசன
கருவிகளை அமைக்க, தோட்டக் கலைத்துறை சார்பில், 75சதவீத மானியம் வழங்கி உள்ளனர். வீரிய ரக விதைகள் என்பதால், செடிகளுக்கு நோய் தாக்குதல் குறைவாக உள்ளது. நல்ல விளைச்சல் உள்ளதால், லாபம் கிடைக்கிறது,"
என்றார்.

தென்னை நார் கழிவுகளை கொண்டு, குழித்தட்டு முறையில், விதை விதைக்கப்பட்டு, 40 நாட்களில், நடவு செய்ய வேண்டும். 75வது நாளில் இருந்து, மிளகாய் காய்க்க துவங்கும். தொடர்ந்து, ஏழு மாதங்கள் வரை விளைச்சல் கொடுக்கும்.

வீரிய ஒட்டு ரகம்

இதுகுறித்து, வட்டார தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் ராணி கூறுகையில்,""செங்காடு கிராமத்தில் உள்ள விவசாயிகளில், 90 சதவீதம் பேர், மாந்தோட்டம் அமைத்துள்ளனர். இதில், ஊடுபயிராக மிளகாய், கத்திரி போன்றவை பயிரிட ஆலோசனை வழங்கப்பட்டது. அதன்படி, யு.எஸ்.172 ரக கத்தரி விதைகளை, விவாயிகளுக்கு வழங்கி உள்ளோம். தொடர்ந்து, நான்கு மாதங்கள் வரை, கத்திரிக்காய் அறுவடை
செய்யலாம்," என்றார்.

## பாகுபாடு இல்லாமல் வறட்சி நிவாரணம் தமிழக விவசாயிகள் சங்கம் தீர்மானம்

பெரம்பலூர்: தமிழக விவசாயிகள் சங்க பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட செயற்குழு கூட்டம் மாநில செயலாளர் ராஜாசிதம்பரம் தலைமையில் பெரம்பலூரில் உள்ள மதனகோபாலசாமி திருமண மண்டபத்தில் நடந்தது.கூட்டத்தில், பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் யூனியன் கொட்டரை கிராமத்தில் 108 கோடி ரூபாய் மதிப்பில் ஐந்தாயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில் மருதையாற்றின் குறுக்கே 211 மில்லியன் கன அடி நீர் கொள்ளவு கொண்ட நீர்த்தேக்க திட்டத்தை அறிவித்த முதல்வருக்கு இச்செயற்குழு நன்றி தெரிவிக்கிறது. இந்த திட்டத்தை உடனே செயல்படுத்த வேண்டும்.மருதையாறு நீர்த்தேக்க திட்டத்திற்கு அரசு கையகப்படுத்தப்பட உள்ள கொட்டரை, ஆதனூர் ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் இழப்பீடாக சந்தை மதிப்பைவிட மூன்று மடங்கு வழங்கிட வேண்டும். நிலம் இழப்பவர்களுக்கு நிலம், வீடு இழப்போருக்கு வீடு வழங்கிட வேண்டும்.தமிழகம் முழுவதும் உள்ள டெல்டா மாவட்டங்கள் தவிர வறட்சியால் பாதிக்கப்பட்ட இதர மாவட்ட விவசாயிகளின் சிறு, குறு விவசாயிகளுக்கு மட்டும் தமிழக அரசு வறட்சி நிவாரணம் அறிவித்துள்ளது.டெல்டா மாவட்ட விவசாயிகளில் சிறு, குறு விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கியதை போன்று பாகுபாடு இல்லாமல் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கிடவேண்டும்.கடந்த 1959ம் ஆண்டு தமிழ்நாடு சிறுகனிம விதி எண் 6ன்படி விவசாய உபயோகத்திற்காக டிராக்டர்களில் ஏரி, ஆறுகளில் வண்டல் மண் எடுத்து செல்ல, வீட்டு உபயோகத்திற்காக அந்தந்த ஓடைகளில் உபயோகமற்ற கப்பி மணல் கட்டணம் இன்றி அனுமதி இன்றி எடுத்து செல்லலாம் என்ற விதிமுறை கட்டாயம் அமல்படுத்த வேண்டும். விவசாயிகளிடம் அபராதம் விதிப்பதை கைவிட வேண்டும்.அனைத்து கிராம பால்உற்பத்தியாளர்கள் சங்கங்களிலும் தரமான பால்கொள்முதல் செய்திடும் வகையில் கம்ப்யூட்டர்மயமாக்கப்பட்ட

தானியங்கி பால் பரிசோதனை கருவிகளை தமிழக அரசு முழு மானியத்தில் வழங்க வேண்டும் என்பது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.இதில் பெரம்பலூர் மாவட்ட தலைவர் மாணிக்கம், செயலாளர் நீலகண்டன், பொருளாளர் மணி., அரியலூர் மாவட்ட தலைவர் அன்பழகன், செயலாளர் விஸ்வநாதன், வட்டார பொறுப்பாளர்கள் கோவிந்தராசு, துரைசாமி, கோவிந்தசாமி, அன்பழகன், ராஜாமணி, வினோபா, ராஜாராம், செல்லக்கருப்பு, சுந்தரராஜன், செந்தில்குமார், சுப்ரமணியன், மதியழகன், செல்லதுரை உட்பட பலர் பங்கேற்றனர்.

## பருவநிலை மாற்றம் விழிப்புணர்வு நிகழ்ச்சி

கோத்தகிரி : கோத்தகிரி சோலூர்மட்டம் பஜாரில், ஐலெண்ட் டிரஸ்ட் சார்பில், பருவநிலை மாற்றம் குறித்த விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி நடந்தது.
ஐலெண்ட் டிரஸ்ட் நிர்வாகி கிரிபாளினி, "பருவநிலை மாற்றத்தின் விபரீதம், அதை தடுக்க வனவளம் மற்றும் நீர்வளத்தை பாதுகாப்பதன் அவசியம்' குறித்து பேசினார்.
தொடர்ந்து, காடுகள் அழிப்பு, எரிசக்தி, தொழிற்சாலை கழிவு, வாகன பெருக்கத்தால் ஏற்படும் அபாயம் குறித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது.
குன்னூர் பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி மாணவியர் மற்றும் பணியாளர்கள் கலை நிகழ்ச்சிகளையும் நடத்தினர்.

## கோத்தகிரியில் உழவர் பெருவிழா

கோத்தகிரி : கோத்தகிரி ஒன்னட்டி கிராமத்தில் உழவர் பெருவிழா நடந்தது.
கோத்தகிரி துணை வேளாண்மை அலுவலர் (பொறுப்பு) ரமேஷ் வரவேற்றார். தேனாடு ஊராட்சி தலைவர் ஸ்டீபன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசினார். தோட்டக்கலை உதவி இயக்குனர் ராஜேந்திரன், தோட்டக்
கலைத் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார்.
விழாவில், கால்நடை துறை, உபாசி, வேளாண்மை பொறியியல் துறை, வேளாண்மை விற்பனை துறை மற்றும் ஆவின் உள்ளிட்ட துறைகளை சேர்ந்த அலுவலர்கள் தங்களது துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கம் அளித்தனர். ஊர் தலைவர் மாதன் தலைமை வகித்தார். இதில், சுற்றுப்புற கிராமங்களை சேந்த விவசாயிகள் பங்கேற்றனர். உதவி வேளாண்மை அலுவலர் பாபு நன்றி கூறினார்.

## மாடுகளுக்கு செயற்கை கருவூட்டல் குச்சிகளை காக்கும் திரவ நைட்ரஜன்

ஈரோடு: ஈரோடு கால்நடை சினை பரிசோதனை மையத்தில், கால்நடைகளின் உறைவிந்து குச்சிகள், செயற்கை கருவூட்டல் முறைக்காக, திரவ நைட்ரஜன் கொண்டு பாதுகாத்து

வைக்கப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில், 48 கால்நடை மருந்தகங்கள், 42 கிளை நிலையங்கள், 20 தரம் உயர்த்தப்பட்ட கிளை நிலையங்கள், இரு கால்நடை பெரு மருத்துவமனை, ஆறு கால்நடை மருத்துவமனைகள் ஆகியவை உள்ளன. ஈரோடு, கோபி, தாளவாடி ஆகிய பகுதிகளில் நடமாடும் மருத்துவமனை வசதிகள் உள்ளன. மாவட்டத்தில் ஈரோடு, கோபி என இரு இடங்களில் கால்நடை பராமரிப்பு கோட்டங்கள் உள்ளன.கால்நடைகளுக்கு சிகிச்சை பணிகள், ஆடு, பசு, எருமை இவைகளுக்கு கரூவூட்டல், சினை பரிசோதனை போன்ற சிகிச்சைகள் மேற்கொள்ளப்படும்.கால்நடை மருத்துவ நிலையங்கள் மூலம், கால்நடைகளின் பல்வேறு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதோடு, மிக குறைந்த கட்டணத்தில் செயற்கை முறை கருவூட்டல் ஊசி போடப்படுகிறது. அதேபோல் ஆண்டுதோறும் யூனியன் வாரியாக சிறப்பு மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகின்றன.தமிழக அரசின் கால்நடை பண்ணைகள் பிற மாநிலங்களில் இருந்து தரமான ஜெர்சி, கலப்பின ஜெர்சி, பீரிசியன், கலப்பின பீரிசியன், காங்கேயம் இனம் மற்றும் முர்ரா இன எருமை உரைவிந்து "குச்சிகள்' பெறப்பட்டுள்ளன. இவைகள் அனைத்தும் மிகச்சிறந்த முறையில் "குடுவை' முறையில் ஈரோடு கால்நடை சினை பரிசோதனை மையத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.ஒரு குடுவைக்கு, ஆறு கால்நடை இனங்கள் வீதம் மொத்தம், 960 குச்சிகள் இந்த குடுவையில் பாதுகாக்கப்படும். 35 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடுவையாகும்.உறைவிந்து குச்சிகளை, தமிழ்நாடு கால்நடை அபிவிருத்தி முகாமையின் மூலம், 45 நாட்களுக்கு ஒரு முறை திரவ நைட்ரஜன் மூலம் பாதுகாக்கப்படுகிறது. குடுவையில் உள்ள உறைவிந்து குச்சிகளை வெளியில் எடுத்து, 37 டிகிரி உள்ள தண்ணீரில், 30 நிமிடம் வைத்தபின் நைட்ரஜன் காண்டு பாதுகாக்கப்படுகிறது.குடுவையில் உள்ள உரைவிந்து குச்சிகள் முழுமையான பரிசோதனைக்கு உட்படுத்திய பின், ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து கால்நடை கிளை நிலையங்களுக்கும் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. கடந்தாண்டில், ஈரோடு மாவட்டத்தில், 2.50 லட்சம் கால்நடைகளுக்கு செயற்கை முறையில் கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது.தற்பொது ஜெர்சி, கலப்பின ஜெர்சி, ஹெச்.எஃப், கலப்பின பீரிசியன், முர்ரா, காங்கேயம் என மொத்தம், 15 ஆயிரம் உறைவிந்து குச்சிகள், ஈரோடு கால்நடை சினை பரிசோதனை மையத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது, என்பது குறிப்பிடத்தக்கது.

## நயினார்கோயிலில் காய்கறி கிட்டங்கி விவசாயிகள் வலியுறுத்தல்

ராமநாதபுரம்:நயினார்கோயில் ஒன்றியம் பாண்டியூரில் காய்கறி கிட்டங்கி அமைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறை தீர் கூட்டம் நடந்தது. கலெக்டர் நந்தகுமார் தலைமை வகித்தார். டி.ஆர்.ஓ., விஸ்வநாதன் முன்னிலை வகித்தார். விவசாயிகளின் கோரிக்கைகள்.மதுரைவீரன், விவசாயி (பாண்டியூர்): நயினார்கோவில் ஒன்றியம் பாண்டியூரில் காய்கறி குடோன், குடிநீர் தேவை கருதி, ஆழ்குழாய் கிணறு அமைக்க வேண்டும். வீரமணி (கொன்னக்குடி): பொதுப்பணித்துறை கண்மாய்களை, மழை காலத்திற்குள்

தூர்வார வேண்டும். பண்ணை குட்டைகள் அமைக்கும்போது கிடைக்கும் மண்ணை விவசாய நிலங்களுக்கு பயன்படுத்த வேண்டும்.கலெக்டர்: கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். முதுகுளத்தூர் பகுதி விவசாயிகள் சிலர் பேசுகையில், ""விவசாய நிலங்கள் அதிகம் உள்ள இந்த பகுதியில் கருவேல மரங்கள் அதிகமாக வளர்ந்துள்ளது. இதனால், நீர்நிலைகளில் தண்ணீர் சேமிக்க முடியவில்லை. கருவேல மரங்களை அப்புறப்படுத்த வேண்டும்," என்றார். உத்திரகோசமங்கை விவசாயிகள் சிலர் பேசுகையில், ""விவசாய நிலங்களில் காட்டு மாடுகள் புகுந்து விளை பொருட்களை நாசம் செய்கின்றன. வனத்துறை மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்றார்.இணை இயக்குனர்(கால்நடை துறை) காவேரி மணியன் கூறியதாவது: காட்டு மாடுகளை மயக்க ஊசி போட்டு விரட்டியடிப்பது என ஆலோசனை தெரிவிக்கப்பட்டது. மயக்க ஊசி போட, டாக்டருக்கு அனுமதி இல்லை. இதனால், பயிற்சி பெற்ற சில டாக்டர்களை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 13 கால்நடை டாக்டர்கள் பணியிடம் காலியாக உள்ளது, என்றார்.

## காட்டுப்பன்றிகளுக்கு பயந்து நிலக்கடலை விவசாயம் தவிர்ப்பு

கம்பம்:காட்டுப்பன்றிகள் மற்றும் யானைகளுக்கு பயந்து, மானாவாரி காடுகளில் விவசாயிகள் நிலக்கடலை, சோளம் மற்றும் கம்பு பயிர்களை தவிர்த்து, எள்ளு, மொச்சை பயிர்களை விதைப்பு செய்கின்றனர்.

கம்பம் பள்ளத்தாக்கில்,ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள மானாவாரி காடுகள், மழையை நம்பியுள்ளன.கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழைகள் பொய்த்து விட்டன. எனவே, எந்த பயிரையும் சாகுபடி செய்யவில்லை. கடந்த சில நாட்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது.

இந்த மழையை பயன்படுத்தி விவசாயிகள் மானாவாரி காடுகளில் விதைப்பு செய்து வருகின்றனர். கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு வரை, லோயர்கேம்பில் ஆரம்பித்து தேவாரம் வரை, ஆயிரக்கணக்கான ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்வார்கள். போதிய மழை இல்லாததாலும், காட்டுப்பன்றிகள் தொல்லையாலும், நிலக்கடலை சாகுபடியை தவிர்த்து விட்டனர்.

நிலக்கடலை மட்டுமின்றி சோளம், கம்பு, சூரியகாந்தி போன்ற பயிர்களையும் விவசாயிகள் ஒதுக்கி விட்டனர்.நிலக்கடலை விதைப்பு செய்தால், விதைப்பு செய்த அன்றே, காட்டுப்பன்றிகள் விதைகளை தின்று விடும். சூரிய காந்தியை நாசம் செய்து விடும். சோளம் மற்றும் கம்பு பயிரிட்டால், யானைகள் தின்று விடும்.

எனவே எள்ளு மற்றும் மொச்சை விதைப்பு செய்யப்படுகிறது. காட்டுப்பன்றிகள் எள்ளு மற்றும் மொச்சையை சாப்பிடாது. எனவே விவசாயிகள் கடந்த சில நாட்களாக கம்பம் பகுதியில் உள்ள மானாவாரி காடுகளில், எள்ளு, மொச்சை பயிர்களை விதைப்பு செய்து வருகின்றனர்.

**24.04.2013**

## நவீன முறையில் வெள்ளாட்டுக்கொட்டகை அமைப்பது எப்படி

நமது நாட்டின் பெருகிவரும் மக்கள் தொகைக்கேற்ப உண்ணும் உணவில் புரதச்சத்தின் தேவையும் கூடிக் கொண்டே வருகிறது. இறைச்சி மற்றும் பால் உற்பத்தியை பெருக்குவதின் காரணமாக மக்களின் புரதத்தேவையை ஈடுசெய்ய முடியும். அனைத்து தரப்பு மக்களாலும் விரும்பி உண்ணப்படும் வெள்ளாட்டு இறைச்சியினை கவனத்தில் கொண்டு பார்த்தால் வெள்ளாட்டினை எண்ணிக்கையில் பெருக்க இயலாது. ஆனால் ஒவ்வொரு வெள்ளாட்டிலிருந்து கிடைக்கக்கூடிய இறைச்சி மற்றும் பாலின் அளவைக் கூட்டி அதன் உற்பத்தித் திறனை பன்மடங்கு அதிகரிக்கச் செய்வதே நமது குறிக்கோளாகும். இதற்கு அறிவியல் பூர்வமான பராமரிப்பு உத்திகளைக் கையாள வேண்டும்.

இதில் முக்கியமான ஒன்று வெள்ளாடுகள் தங்குவதற்கு கொட்டகை அமைப்பது ஆகும். மேய்ச்சல் நிலங்களின் பரப்பளவு சுருங்கிவரும் நிலையில் கொட்டில் முறையில்தான் வெள்ளாடுகள் வளர்க்கும் நிலை நம்மை நோக்கி வந்துகொண்டே இருக்கிறது. நல்ல முறையில் ஆட்டுக்கொட்டகை அமைத்தால் ஆடுகள் நலமாகவும் வளமாகவும் வளர்ந்து பெருகி நல்ல பலன் கொடுக்கும். இனி ஆட்டுக் கொட்டகையை அறிவியல் ரீதியாக எப்படி அமைப்பது என விரிவாக காண்போம்.

**கொட்டகை அமைக்க இடம் தேர்வுசெய்தல்:** கொட்டகையை மேடான இடத்தில் அமைக்க வேண்டும். மழைநீர் தேங்கிவிடாமல் வடிகால் உள்ள நிலமாக இருக்க வேண்டும். குடிநீர் வசதி உள்ள இடமாக இருக்க வேண்டும். மின்சார வசதி மற்றும் சாலை போக்குவரத்து இணைப்பு உள்ள இடமாக இருக்க வேண்டும். கொட்டகையை சுற்றி நிழல் தரும் மரங்கள் இருக்க வேண்டும். ஆடுகளுக்குத் தேவையான பசுந்தீவனப்பயிர் சாகுபடி செய்ய விளைநிலம் இருக்க வேண்டும்.

**கொட்டகை அமைக்கும்போது கவனிக்க வேண்டியவை:** கொட்டகையின் நீளவாக்கு கிழக்கு - மேற்கு திசையில் அமைய வேண்டும். இப்படி இருப்பதால் காலை - மாலை வேளையில் சூரியனின் இளங்கதிர் கொட்டகையினுள் விழும். உச்சி வெயிலின் வெப்பத்தாக்கம் இருக்காது.

**பக்கவாட்டுச்சுவர்:** கொட்டகையின் நான்கு பக்க சுவர்களும் ஒரு அடி உயரம் வரைதான் கல் கட்டுமானத்தில் இருக்க வேண்டும். இதற்கு மேல் கூரை கம்பி வலை அல்லது மூங்கில் தட்டிகளைக் கொண்ட அமைப்பாக இருக்க வேண்டும். இவ்வாறு பக்கவாட்டுச் சுவர் அமைப்பதினால் வெளிச்சமும் நல்ல காற்றோட்டமும் கொட்டகையின் உள்ளேஇருக்கும். மழை, குளிர் காலங்களில் குறிப்பாக இரவு நேரத்தில் பக்கவாட்டு திறந்தவெளியை பாலிதீன்,

கோணிப்பைகளை கொண்டு திரை அமைத்து மூடலாம்.

**கூரை:** சூரிய வெப்பத்தைக் குறைவாகக் கடத்தும் பொருட்களைக் கொண்டு கூரை வேயப்பட்டால் அதன் அடியில் உள்ள ஆடுகளுக்கு வெப்ப அழற்சி ஏற்படாது. மழைவரும் பொழுது ஆடுகள் மழையில் நனையாமலும் கூரைபாதுகாக்கும். சுட்ட களிமண் ஓடுகள், அலுமினியம் மற்றும் இரும்புத் தகடுகள், ஆஸ்பெஸ்டாஸ், லைட்ரூப், பனை மற்றும் தென்னை ஓலைபோன்றவை கொண்டு கூரை அமைக்கலாம். கூரையின் நடு உச்சி தரையிலிருந்து 3.50 மீட்டர் உயரமும் பக்கவாட்டில் 2.5 மீட்டர் உயரமும் இருக்க வேண்டும். கூரையின் விளிம்பு சுவரிலிருந்து 45-60செ.மீ. வெளியே நீட்டிக்கொண்டிருக்கும்.

**தரை:** நமது தட்பவெப்பச் சூழலுக்கு செம்மண், சரளை மண் அல்லது கிணற்று மண் இதில் ஏதாவது ஒன்றை தரை மட்டத்திலிருந்து 45 செ.மீ. உரத்திற்குப் பரப்பி திமிசுக்கட்டையால் நன்கு இடித்து கடினமாக இறுகச் செய்யலாம். இவ்வாறு தரை இருப்பதனால் ஆடுகளின் சிறுநீரை உறிஞ்சிக் கொள்ளும். ஆட்டுப் புளுக்கையினை கூட்டிப்பெருக்கவும் எளிதாக இருக்கும். தரையை வருடத்திற்கு இரண்டுமுறை 15 செ.மீ. ஆழத்திற்கு சுரண்டி எடுத்துவிட்டு புதிய மண் கொட்டி பரப்பித் தரையை அமைக்க வேண்டும். கிருமிகள் மற்றும் உண்ணிகளை கட்டுப்படுத்த இது உதவும். மழை நாட்களில் வாரத்திற்கு இரண்டு முறை சுண்ணாம்புத்தூளை தரையில் தெளிக்க வேண்டும். தரையின் ஈரப்பதத்தை சுண்ணாம்பு ஈர்த்து உலரச் செய்வதோடு கிருமி நாசினியாகவும் செயல்படுகிறது.

**மரச்சட்ட மேடை வடிவ தரை:** ஆட்டுக்குட்டிகளை மண் தரையில் விட்டு வளர்த்தால் மண் நக்குதல் பழகி ரத்தக்கழிச்சல் நோயால் இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. பனி மற்றும் மழைக் காலத்தில் இரவு வேளையில் மண் தரை குளிர்வாக இருப்பதால் ஆட்டுக் குட்டிகள் குளிர் தாங்காமல் சளி பிடித்து இறந்துவிட வாய்ப்புகள் அதிகம். இதுபோன்ற நிகழ்வுகளை தடுக்க ஆட்டுக்குட்டிகளை தரையில் விடாமல் மூன்று மாத வயதுவரை மரச் சட்டங்களினால் ஆன பரண்மீது விட்டு வளர்ப்பது நன்று. இம்மரச்சட்ட பரண் தரையிலிருந்து 3 அடி உயரத்தில் இருக்க வேண்டும். இரு சட்டங்களுக்கு இடையே 1.5 செ.மீ. இடைவெளி இருக்க வேண்டும். இந்த சந்தில் அடியில் உள்ள எருவினை சேகரித்துக்கொள்ளலாம்.

மரச்சட்டங்களின் அகலம் மற்றும் தடிமண் (கனம்) முறையே 2-4 இன்ச்கள் மற்றும் 1-2 இன்ச் இருத்தல் நலம். தைல மரச்சட்டங்கள் பரண் அமைக்க ஏதுவானவை. தற்பொழுது நவீன முறையில் கொட்டகை அமைக்க மரச்சட்டங்களுக்கு மாற்றாக பிளாஸ்டிக்கினால் ஆன சட்டங்களைக் கொண்டும் ஆட்டுக்கொட்டகையில் தரை அமைக்கலாம். இவை சுத்தம் செய்ய எளிதாகவும் அதிக நாள் உழைக்கும் திறனும் கொண்டது.

**தீவனப்பெட்டிகள்:** அடர்தீவனம், உலர்தீவனம் மற்றும் பசுந்தீவனங்களை ஆடுகளுக்கு அளிக்கக்கூடிய வகையிலும் ஆடுகள் தின்னும்போது சேதாரம் இல்லாமல் இருக்க வேண்டியும் தீவனப்பெட்டிகள் இருக்க வேண்டும். மரப்பலகை, துத்தநாகத் தகடு, குறுக்கு வெட்டாக

பிளக்கப்பட்ட பிளாஸ்டிக் டிரம்களைக்கொண்டு தீவனப்பெட்டிகளை உருவாக்கலாம். தீவனத்தைத் தரையில் போடக்கூடாது. ஆடுகள் குளம்புகள், சாணம், மூத்திரம் பட்ட தீவனத்தைச் சாப்பிடாது. எனவே தீவனங்களைத் தீவனப்பெட்டியில் போடவேண்டும்.

**மருந்துக்குளியல் தொட்டி:** ஒட்டுண்ணிகளின் தாக்கத்திலிருந்து ஆடுகளைப் பாதுகாக்க குளியல் செய்வது அவசியம். 1.2x1x0.5 மீட்டர் கொள்ளளவு உள்ள குளியல் தொட்டியினை சிமென்ட் கான்கிரீட்டினால் கட்டவேண்டும். கழிவுநீர் வடிய தொட்டியின் அடிப்புறத்தில் துளை இருக்க வேண்டும். தொடர்பு கொள்ள வேண்டிய பண்ணைகள்: நித்தின் பார்ம் - 98422 18412, அம்பாள் ஆட்டுப்பண்ணை-99763 40337.

**-கே.சத்தியபிரபா, உடுமலைப்பேட்டை.**

## இயற்கை உரத்தில் தர்பூசணி; லாபத்தை கொட்டும் விவசாயி

விவசாயத்திற்கு தேவையான மழை இல்லை, கூலிக்கும் ஆட்கள் வருவதில்லை. விளை பொருட்களுக்கு போதிய விலை கிடைக்கவில்லை .இது போன்ற காரணங்களால் விவசாயிகள் பலர், இன்று விவசாயத்தையே கைவிட்டு வருகின்றனர். ஆனால் சிவகாசி முதலிப்பட்டியை சேர்ந்த என். விஜயராஜ், "எதையும் சரியாக செய்தால், லாபம் ஈட்ட முடியும்' என்ற, தன்னம்பிக்கையுடன் தர்பூசணி விவசாயத்தில் கொடிகட்டி பறக்கிறார் .

சிவகாசியில் சுவீட்ஸ் ஸ்டால் நடத்தி வரும் இவர், பி.ஏ., பட்டதாரி. முதலிப்பட்டியை சேர்ந்த தனது மாமனார் குட்டி நாடார், விவசாயத்தில் போதிய விலை இன்றி, விவசாயத்தை விடும் நிலையில் இருந்தார்.

இதை தொடர்ந்து விஜயராஜ், மாமனாருக்கு உதவியாக, ஓய்வு நேரங்களில் விவசாயத்தில் ஈடுபட்டார். இதற்கான நவீன தொழில் நுட்பம், அரசு மானிய திட்டங்களை அறிந்து, தர்பூசணி விவசாயத்தில் இறங்கினார். இதற்கு இயற்கை உரங்களையே பயன்படுத்தி வருகிறார். அதன் பயனாக, ஏக்கருக்கு மூன்று டன் விளைச்சல் கிடைப்பதாக, பெருமையுடன் கூறுகிறார் விஜயராஜ்.

**அவர் கூறியதாவது:** நிலத்தில் சொட்டு நீர் பாசன முறையை, அரசு மானியத்துடன் அமைத்தேன். இயற்கை உரங்களாக மாட்டு சாணம், ஹோமியமும் தான் இதற்கு பிரதானம் என்பதால், மாடுகளை வளர்க்க தொடங்கினேன். நிலத்தில் ஆறு மாதத்திற்கு ஒரு முறை சாணத்தை பரப்பி, சட்டி கலப்பை மூலம் உழவு செய்து, நிலத்தை ஆறப்போட்டு விடுவேன். தர்பூசணி மஞ்சள் ரகத்தில், இனிப்பு தன்மை அதிகம் இருப்பதால், விலையும் கிடைக்கும் என்பதை அறிந்து, மஞ்சள் தர்பூசணியை பயிரிட்டேன்.

சொட்டு நீர் குழாய் வழியாக மாட்டு ஹோமியத்தை கலந்து விடுவேன். சொட்டு நீர் பாசனத்தால் பணியாளர்கள் தேவையில்லை. 60 நாட்களில் ஒரு செடியில் நல்ல எடை, நடுத்தரம், சிறிய காய் என, மூன்று வகை காய்கள் காய்க்கும். தமிழ் மாதமான மாசி, பங்குனி, சித்திரையில்

அறுவடைசெய்ய வசதியாக, பயரிட்டு வருகிறேன். அதிகபட்சமாக, ஒரு காய் 4 கிலோ எடையில் கிடைக்கின்றன. எட்டு ஏக்கரில் பயிர் செய்ததில், 24 டன் வரை விளைச்சல் கிடைத்தது. கிலோ 4 ரூபாய்க்கு விற்பனையானது . ஒரு ஏக்கருக்கு 15 முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைத்தது. 60 நாளில் ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் என்பது, தொழில் செய்பவர்களுக்கும், பணியாளர்களுக்கும் சர்வ சாதாரணம் என்றாலும், விவசாயத்தின் மூலம் கிடைப்பதில் ஆத்ம திருப்தியளிக்கிறது.

எனது மாமனார், விவசாயத்தை கைவிட வேண்டும் என்ற போதும், விடாமல் முயற்சித்து வெற்றியும் பெற்றுள்ளேன். விடுமுறை, ஓய்வு தினங்களில், மனைவி, குழந்தைகளுடன் விவசாய நிலத்திற்கு சென்று விடுவேன். குழந்தைகள் மண்ணில் விளையாட கூடாது என, பெற்றோர் கண்டிப்பர். ஆனால் நான், மண்ணில் விளையாட வேண்டும், விவசாயத்தை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, குழந்தைகளையும் ஊக்கப்படுத்தி வருகிறேன். இந்தியாவில் விவசாயம் குறைந்து, உணவுப்பஞ்சம் ஏற்படும் போது தான், விவசாயத்தின் அருமை மக்களுக்கு தெரியும். விவசாயத்தில், நவீன தொழில் நுட்பம், அரசு மானிய திட்டங்களை சரியாக பயன்படுத்தினால், வெற்றியடைய முடியும், என்றார்.

**இவரை பாராட்ட 94435 45401.**

## சின்னச்சின்ன செய்திகள்

கோழித்தீவனமாக அசோலா: அசோலா எனப்படும் பெரணி வகை நீர்த்தாவரம் கோழிக்குஞ்சுகளுக்கு அளிக்கப்படும் தீவனத்தில் 20 சதவீதம் வரை சேர்த்தால் குஞ்சுகள் நன்கு வளர்ந்து நல்ல எடையுடன் காணப்படும். கோழிகளுக்கு அசோலாவை உணவாக இடுகின்றபொழுது மஞ்சள்கருவானது நல்ல தேர்ச்சியுடன் உருவாகிறது. மேலும் கோழிகளில் நோய் எதிர்ப்புத்தன்மை இருப்பதாகவும் திகழ்கிறது.

**மாட்டுத்தீவனமாக அசோலா:** அசோலாவை கால்நடைகளுக்கு தீவனமாகவோ, பச்சையாகவோ அல்லது பதப்படுத்தியோ பயன்படுத்தலாம். அசோலாவில் அதிக புரதச்சத்தும், கொழுப்புச்சத்தும் உள்ளது. மேலும் இதில் நார்ப்பொருட்கள் குறைவு. கால்நடைகளின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து அமினோ அமிலங்களையும் அசோலா கொண்டுள்ளது. அசோலாவை உப்புடன் சேர்த்து பன்றிகளுக்கு அளித்தால் பன்றிகள் அசோலாவை நன்றாக உட்கொண்டு அதிக எடையுடன் திகழ்கின்றன. மேலும் இறைச்சியின் தன்மையும் நன்றாக இருக்கிறது. கால்நடைகளுக்கு அசோலாவை கோதுமை வைக்கோலுடன் சேர்த்து அளித்தால் கால்நடைகளின் எடையும் வளர்ச்சியும் அதிகரிக்கிறது.

**மீன் வளர்ச்சிக்கு அசோலா:** மீன்கள் மற்ற தீவனத் தாவரங்களைவிட அசோலாவை விரும்பி

உண்கின்றன. மீன்கள் வளரும் குட்டைகளில் ஒரு ஓரத்தில் மிதக்கும் மூங்கில் கழிவுகளைப்போட்டு அசோலாவை வளர்க்க வேண்டும். மீன்கள் தேவைப்படும் சமயத்தில் வந்து அசோலாவை உண்டுவிட்டு சென்றுவிடும். மேலும் அசோலாவை காயவைத்து பொடி செய்து தண்ணீரில் தெளித்துவிடலாம்.

**நெல் வயல்களில் அசோலாவும் மீன் வளர்த்தலும்:** தண்ணீர் ஓரளவு தேங்கி நிற்கும் நெல் வயல்களில் மீன் வளர்த்து அதிக லாபம் பெறலாம். அசோலாவை மீன் வளர்க்கும் வயலில் வளர்ப்பதால் அசோலா மீன்களுக்கு உணவாகப் பயன்படும். நெல் வயல்களில் வரப்பு ஓரத்தில் 1.5 மீட்டர் அளவுக்கு 0.50 மீட்டர் ஆழத்திற்கு வயலின் இரண்டு வரப்பு ஓரங்களிலும் பள்ளம் செய்து மற்ற இடங்களில் வயலைத் தயாரித்து நடவு செய்ய வேண்டும். வயலில் நெற்பயிர் வேர் பிடித்தபிறகு தண்ணீர் 7.5 செ.மீ. முதல் 10 செ.மீ. அளவு தேங்கும் அளவுக்கு பராமரிக்க வேண்டும். நடவு நட்ட 7வது நாள் ஒரு ஏக்கருக்கு 200 கிலோ அளவு அசோலாவை தூவிவிட வேண்டும். அசோலா வளர்ந்து பெருக்கமடையும். நடவு நட்ட 10 நாட்களில் ஏக்கருக்கு 2500-3000 மீன் குஞ்சுகள் வயலில் விடவேண்டும். அசோலாவைத் தனியாக பொடி செய்து தூவிவிடுவதன் மூலம் மீன்களுக்கு உணவாகப் பயன்படும். அசோலாவை பசுமையாக எடுத்து மாட்டுச்சாணத்துடன் 1:1 என்ற அளவில் சேர்த்து இரண்டு வாரம் மக்கவைத்து நெல்வயலில் இடுவதன் மூலம் மீன்களுக்கு உணவாகப் பயன்படும். 100 கிலோ பசுமையான அசோலாவை 100 கிலோ பச்சைச் சாணம், 50 கிராம் சூப்பர் பாஸ்பேட்டுடன் கலந்து ஒன்று சேர்த்து குவியலாக வைத்து 2 வாரத்திற்கு மக்கச்செய்து பிறகு அதில் 500 மி.கி. நீலப்பச்சைப்பாசி கலவையும் சேர்த்து மீன்களுக்கு உணவாக நெல்வயலில் இடவேண்டும். இவ்வாறு மீன், அசோலா இரண்டையும் வளர்ப்பதன்மூலம் மீன்கள் அசோலாவை உணவாக எடுத்துக்கொண்டு வளர்கின்றன. இதனால் மீன்களின் கழிவுப் பொருட்களும் நெற்பயிருக்கு பயன்படுகின்றன. இதன்மூலம் ஒரு ஏக்கருக்கு கிட்டத்தட்ட 150, 200 மீன்கள் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் இதன்மூலம் அதிக வருமானம் பெறலாம்.

(தகவல்: ரா.ராஜேஷ், ந.ஜெய்வேல், வேளாண் நுண்ணுயிரியல் துறை, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003. 99448 93580)

தாய்லாந்து நிறுவனத்தின் தலைசிறந்த F1 ஹைபிரிடு விதைகள்: போர்டடோ, சூப்பர் குட்டை புடல், சிவப்பு சதை பப்பாளி ""சப்னா", ""சாம்பல் பூசணி" விதைகள் வாங்க அணுக வேண்டிய முகவரி: East West Seeds India Pvt. Ltd., Gut No.66, Village Narayanpur (BK), P.O., Waluj,

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

25.04.2013 A.M

## ரெட் குளோப் என்ற புதிய ரக திராட்சை பயிரிட்டு கம்பம் விவசாயி மகிழ்ச்சி



கூடலூர்: கம்பம் அருகே உள்ள சுருளிப்பட்டி விவசாயி ரெட்குளோப் என்ற ஏற்றுமதி தரம் வாய்ந்த புதிய ரக திராட்சை சாகுபடி செய்து சாதனை படைத்துள்ளார். தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான கூடலூர், கருநாக்கமுத்தன்பட்டி, சுருளிப்பட்டி உட்பட சுமார் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் கருப்பு பன்னீர் திராட்சை சாகுபடி நடைபெறுகிறது. இதுதவிர சின்னமனூர், ஓடைப்பட்டி பகுதிகளில் விதையில்லா பச்சை திராட்சை சாகுபடி செய்யப்பட்டது.இந்நிலையில், சுருளிப்பட்டியை சேர்ந்த விவசாயி பொன்காட்சி கண்ணன், ரெட்குளோப் என்ற ஏற்றுமதி தரம் வாய்ந்த புதிய ரக திராட்சை பயிரிட்டு சாதனை படைத்துள்ளார். மகாராஷ்டிரா மாநிலத்தில் பயிரிடப்பட்டு, வெளிநாடுகளுக்கு அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படும் ரெட்குளோப் என்ற புதிய ரக திராட்சையை சுருளிப்பட்டியில் உள்ள அவரது தோட்டத்தில் சாகுபடி செய்துள்ளார்.ரெட்குளோப் திராட்சையானது, சாதாரண திராட்சையை விட பெரியதாகவும், சிவப்பு கலரில் பிளம்ஸ் பழம் அளவில் சதைப் பிடிப்புடனும், பழத்தினுள் விதைகள் சிறிய அளவிலும் உள்ளன. இது குறித்து பொன்காட்சி கண்ணன்

கூறுகையில், 'ஒரு ஏக்கர் நிலத்தில் ரெட்குளோப் விவசாயம் செய்ய 1.5 லட்சம் வரை செலவாகிறது. ஏக்கருக்கு 8 டன் வரை பலன் தருகிறது. இந்த பழம் ஏற்றுமதி தரம் வாய்ந்தது. தற்போது கிலோ 80க்கு வியாபாரிகள் வாங்கிச் செல்கிறார்கள். சுமார் 20 நாட்களுக்கும் மேலாக இருப்பு வைத்து ஏற்றுமதி செய்யலாம் என்றார்.

## மத்திய அரசின் கம்பெனி விவசாய திட்டத்தால் வியாபாரிகளின் பிடியில் விவசாயம் சிக்கும்



சேலம்: சேலம் சோனா கல்லூரி மேலாண்மைத் துறையின் 'தளிர் அமைப்பு சார்பில் 'உழவுக்கும் உயிர் உண்டு என்ற தலைப்பில், இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கம் நடந்தது. இதில் இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது:இயற்கையோடு மனிதன் இணைந்து வாழ்ந்தவரை எந்த பிரச்னையும் இல்லை. வாழ்க்கை முறை மாறிவிட்டதால் தற்போது ஏராளமான பிரச்னைகள் ஏற்பட்டுள்ளது. மீண்டும் இயற்கையை நோக்கி நாம் பயணித்தால் பெரிய அளவிலான பிரச்னைகளையும் எளிதாக தீர்க்கலாம். 'நீரின்றி அமையாது உலகுÕ என்றார் ஔவையார். ஆனால், நீர்நிலைகள் இருந்த பள்ளங்கள் அனைத்தும் இப்போது உருமாறி விட்டது. மதுரையில் நீதிமன்றமும், சேலம், புதுக்கோட்டையில் பஸ் நிலையங்களும் அமைந்துள்ள பகுதிகள் இதற்கு சாட்சி.கருவிகளும், வாகனங்களும் இல்லாமல் இயற்கையை கொண்டே உழவு செய்வது தான் இயற்கை விவசாயம். உரம் என்ற பெயரில் மண்ணில் உப்புக்கலவையையும், ரசாயனத்தையும் கொட்டுவதால் அதன் வீரியம் குறைந்து போகிறது.

மண்ணிலிருந்து கிடைக்கும் இலை, தழை, புற்களை மண்ணுக்கே உரமாக்கி பயிரிடுவது தான் இயற்கை விவசாயம்.இயற்கை விவசாயம் செய்தால் லாபம் கிடைக்குமா? இதுபோன்ற சோதனை முயற்சிகளில் ஈடுபடலாமா? என்ற கேள்வி பல விவசாயிகளுக்கு உள்ளது. 5 ஏக்கர் நிலம் வைத்திருந்தால் அதில் 5 சென்டில் மட்டும் இயற்கை விவசாயம் செய்து பாருங்கள். நல்ல பலன் கிடைத்தால் முழு நிலப்பரப்பையும் இயற்கை விவசாயத்துக்கு மாற்றுங்கள். கடந்த 55 ஆண்டுகளில் 2 லட்சத்து 50 ஆயிரம் விவசாயிகள் வறட்சியின் காரணமாக தற்கொலை செய்து கொண்டதாக அறிக்கைகள் கூறுகின்றன. இதற்கான காரணம் குறித்து அரசோ, அதிகாரிகளோ முழுமையான ஆய்வு செய்ததாக தெரியவில்லை. இந்நிலையில் 'கம்பெனி விவசாயம்Õ குறித்து மத்திய அரசு ஆய்வு செய்து வருகிறது. இது வியாபாரிகளின் கையில் விவசாயத்தை அடகு வைக்கும் செயல்.கம்பெனி விவசாயத்தால் ஏற்படப்போகும் அபாயத்தை நாம் உணரவேண்டும். விவசாயம் விவசாயிகளின் கையில் இருந்தால் மட்டுமே, மக்களுக்கு தட்டுப்பாடு இல்லாமல் உணவுப் பொருட்கள் கிடைக்கும். இவ்வாறு நம்மாழ்வார் பேசினார்.

## 2012,13ம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 25 கோடி டன் இலக்கை எட்டும்



புதுடெல்லி : 2012,13ம் ஆண்டில் உணவு தானிய உற்பத்தி 25.42 கோடி டன் இலக்கை எட்டும் என்று மத்திய வேளாண்மை துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.
மக்களவையில் நேற்று முன் தினம் உறுப்பினர்களின் கேள்விகளுக்கு பதிலளித்து மத்திய வேளா ண்மை துறை அமைச்சர் சரத் பவார் கூறியதாவது:

கடந்த 2009,10ம் ஆண்டில்தான் நாட்டில் பல மாநிலங்களில் கடும் வறட்சி ஏற்பட்டு, உணவு தானிய உற்பத்தியில் இலக்கை எட்ட முடியா மல் போனது. ஆனாலும், 2010,11ம் ஆண்டில் இல க்கை எட்டி விட்டோம். இந்த ஆண்டில்(2012,13) சில மாநிலங்களில் வறட்சி நிலவிய போதும் இலக்கை எட்டி விடுவோம். 2வது திருத்திய மதிப்பீட்டின்படி, உணவு தானிய உற்பத்தி 25.42

கோடி டன்னாக இருக்கும் என கணக்கிடப்பட்டுள்ளது.

அரிசி உற்பத்தி இலக்கு 10.4 கோடி டன்னாக நிர்ணயிக்கப்பட்டது. இது வரை 10.18 கோடி அளவுக்கு அரிசி உற்பத்தியாகியுள்ளது. பருப்பு உற்பத்தி இலக்கு 1.82 கோடி டன்னாக நிர்ணயிக்கப்பட்டது. இது வரை 1.75 கோடி டன் அளவுக்கு உற்பத்தியாகியுள்ளது. உத்தரபிரதேசம், பீகார், மத்திய பிரதேசம் பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் அரிசி உற்பத்தி அதிகமாகி உள்ளது. அதே சமயம், ஆந்திரா, குஜராத், கர்நாடகா, மகாராஷ்டிரா, ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் வறட்சி காரணமாக இலக்கு எய்தப்படவில்லை என்றார்.

## முதல்வர் அறிவித்த மருதையாறு நீர்த்தேக்க திட்டம் உடனே செயல்படுத்த வேண்டும் விவசாயிகள் வலியுறுத்தல்

பெரம்பலூர்: முதல்வர் அறிவித்த மருதையாறு நீர்த்தேக்க திட்டத்தை உடனே செயல்படுத்த வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி உள்ளனர்.

பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்ட தமிழக விவசாயிகள் சங்க செயற்குழு கூட்டம் பெரம்பலூரில் நடைபெற்றது. மாநில செயலாளர் ராஜாசிதம்பரம் தலைமை வகித்தார். பெரம்பலூர் மாவட்ட தலைவர் பி.மாணிக்கம், செயலாளர் நீலகண்டன், பொருளாளர் மணி, அரியலூர் மாவட்ட தலைவர் அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், ஆலத்தூர் ஒன்றியம் கொட்டரை கிராமத்தில் ரூ.108 கோடி மதிப்பில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில் மருதையாற்றின் குறுக்கே 211 மில்லியன் கனஅடி நீர் கொள்ளவு கொண்ட நீர்த்தேக்க திட்டத்தை அறிவித்த முதல்அமைச்சருக்கு நன்றி தெரிவிப்பது. இந்த திட்டத்தை உடனே செயல்படுத்திட வேண்டும்.

மருதையாறு நீர்த்தேக்க திட்டத்திற்கு அரசு நிலம் கையகப்படுத்தப்பட உள்ள கொட்டரை, ஆதனூர் பகுதிகளில் உள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில் தமிழக அரசு இழப்பீடாக சந்தை மதிப்பைவிட 3 மடங்கு வழங்கிட வேண் டும். மேலும் நிலம் இழப்பவர்களுக்கு நிலமும், வீடு இழப்போருக்கு வீடும் வழங்கிட வேண்டும்.

டெல்டா மாவட்ட விவசாயிகளில் சிறு,குறு விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்கியதை போல், பாகுபாடு இல்லா மல் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவா ரணம் வழங்கிட வேண்டும்.

விவசாய உபயோகத்திற்காக டிராக்டர்களில் ஏரி, ஆறுகளில் வண்டல் மண் எடுத்து செல்ல, வீட்டு உபயோகத்திற்காக அந்தந்த ஓடைகளில் உபயோக மற்ற கப்பி மணல் கட்டணம் இன்றி அனுமதி

இன்றி எடுத்து செல்லலாம் என்ற விதிமுறை கட்டாயம் அமல்படுத்தவேண்டும். விவசாயிகளிடம் அபராதம் விதிப்பதை கைவிட வேண்டும்.
அனைத்து கிராம பால் உற்பத்தியாளர்கள் சங்கங்களிலும் தரமான பால் கொள்முதல் செய்திடும் வகையில் கணினிமயமாக்கப்பட்ட தானியங்கி பால் பாரிசோதனை கருவிகளை தமிழக அரசு முழுமானியத்தில் வழங்க வேண்டும். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.
செயலாளர் விஸ்வநாதன், வட்டார பொறுப்பாளர்கள் கோவிந்தராசு, துரைசாமி நாயுடு, கோவிந்தசாமி, அன்பழகன், ராஜாமணி, வினோபா, ராஜாராம், செல்லக்கருப்பு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நவீன?தொழில்நுட்பத்துடன்?கரும்பு?விவசாயம் மாவட்டத்தில் முதன்முறையாக செயலாக்கம்

ராமநாதபுரம்: நவீன தொழில்நுட்பத்துடன் நாற்று முறையில் ஆலைக்கரும்பு விவசாயம் செய்யும் நர்சரி பண்ணை ராமநாதபுரம் மாவட்டத்தில் முதன்முறையாக செயல்படுத்தப்படுகிறது.
ராமநாதபுரம் மாவட்டத்தில் மழையை நம்பி விவசாயிகள் உள்ளனர். இந்த மாவட்டத்தில் வறட்சியை தாங்கி வளரும் பயிர்களை சாகுபடி செய்வதற்கான புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் பணியில் கலெக்டர் நந்தகுமார் ஈடுபட்டுள்ளார்.
தக்காளி, வெண்டை, அவரை, சீனிஅவரை, கத்தரி, பீர்க்கை, பாகற்காய், புடலை உள்ளிட்ட காய்கறிகள் மதுரை உள்ளிட்ட பிற மாவட்டங்களில் இருந்து தருவிக்கப்பட்டு வெளிமார்க்கெட்டில் கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. இந்த காய்கறிகளை இந்த மாவட்டத்திலேயே பயிரிட்டு விவசாயிகள் பயன்பெறும் நோக்கில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.
மத்திய, மாநில அரசு நிதி உதவியுடன் விவசாயிகள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு மானியத்துடன் கூடிய வங்கிக்கடன், இலவச இடுபொருட்கள், வேளாண் ஆலோசனைகள் வழங்கப்படுகிறது. வேளாண் அபிவிருத்திக்காக Ôஅட்மாÕ திட்டம் நயினார்கோவில், போகலூர், முதுகுளத்தூர், கமுதி ஒன்றியங்களில் செயல்படுத்தப்படுகிறது.
வேளாண்துறை, வேளாண்மை பொறியியல்துறை, வேளாண் பல்கலைக்கழகம், தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, மீன்வளத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் ஒருங்கிணைந்துள்ள இந்த திட்டத்தில் விவசாயிகளுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்படுகிறது.
இதுகுறித்து வேளாண்மை, மேலாண்மை தொழில்நுட்ப வல்லுனர் ஏகாம்பரம் கூறுகையில், Ô

ராமநாதபுரம் மாவட்டத்தில் காய்கறி உற்பத்தி செய்வதில் 10 ஆயிரம் விவசாயிகள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

நயினார்கோவில் ஒன்றியம் அக்கிரமேசியில் சர்க்கரை ஆலைக்கு தேவையான கரும்பு உற்பத்தி செய்யும் நவீன யுக்தி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வெட்டிய கணுவுடன்கூடிய கரும்பை நிலத்தில் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஏற்படும் அதிக செலவை தவிர்க்கும் வகையில் நர்சரி மூலம் கரும்புநாற்று உற்பத்தி செய்யப்படுகிறது. கரும்பின் கணு பகுதியை மட்டும் தனியாக வெட்டி எடுத்து நாற்று பயிராக வளர்க்கும் முறையை சக்தி சர்க்கரை ஆலை, ராமநாதபுரம் மாவட்ட விவசாயி ஒருவருக்கு பயிற்சி அளித்து செயல்படுத்தியுள்ளது.

கரும்பு நாற்றங்கால் பண்ணையில் இருந்து, நாற்று வாங்கி ஆலை கரும்பு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு சாகுபடி செய்வதற்கான ஏற்பாடுகளை இந்த நிறுவனமே செய்கிறது. வளர்ச்சி குறித்த ஆலோசனைகளை, தோட்டக்கலை மற்றும் வேளாண்துறை வல்லுனர்கள் அளிக்கின்றனர். நயினார்கோவில் ஒன்றியம் அக்கிரமேசி கிராமத்தில் கரும்புநாற்றங்கால் நர்சரி துவக்கிய விவசாயிக்கு நல்ல வருமானம் கிடைக்கிறதுÕ என்றார்.

இதுகுறித்து கரும்புநாற்று நர்சரி தொடங்கியுள்ள அக்ரமேசி விவசாயி ராமநாதன் கூறுகையில், Ôகரும்பு சாகுபடி அதிகரிக்கும் வகையில் கரும்பை நாற்றுகளாக வளர்ப்பதற்கு சக்தி சர்க்கரை ஆலை பயிற்சி அளித்தது. கரும்பில் உள்ள கணு பகுதியை மட்டும் வெட்டி எடுக்கும் கருவி மற்றும் நர்சரியில் சூரியஒளி அதிகம் தாக்காமல் பாதுகாக்கும் பசுமைவலை போன்றவற்றை வழங்கியுள்ளது.

கரும்பில் வெட்டி எடுக்கப்படும் கணுக்களை சிறிதளவு சுண்ணாம்பு, யூரியா, பெவிஸ்டான் யூரியா உள்ளிட்ட கரைசலில் 5 நிமிடம் ஊர வைத்து, அதனை ஈரப்பதமுள்ள கூடை அல்லது சாக்கில் கட்டி கணுவில் முளைவெடிக்கும் வகையில் ஒருவாரம் வைக்க வேண்டும். முளைவிட்ட நாற்றை முட்டைகள் அடுக்கும் அளவுள்ள குழித்தட்டில் தென்னைநாறு தும்புகலவையுடன் கணு நாற்றுகளை வைத்து இதற்காக அமைக்கப்பட்ட வெப்பம் தாக்கதாக வலைகூடாரத்திற்குள் வைக்க வேண்டும். 30 நாட்களுக்குள் இவை நெல்பயிர் போல வளர்ந்துவிடும். 50 எண்ணிக்கை உள்ள ஒரு குழித்தட்டு ரூ.65க்கு விற்கப்படுகிறது.

கணுவுடன் கூடிய கரும்புகளை துண்டுதுண்டாக வெட்டி நடுவதற்கு, கூலியாட்கள், தண்ணீர் பாய்ச்சல், களை எடுத்தல், விளைந்த கரும்புகளை வெட்டுவதற்கு என மொத்தம் ஏக்கருக்கு ரூ.5 ஆயிரம் செலவாகிறது.

நாற்றங்கால் கரும்பு பயிரை நடுவதற்கு ஏக்கருக்கு ரூ.2 ஆயிரம் மட்டும் செலவாகும். விவசாயிகளிடம் இதற்கு நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு டன் கரும்பு ரூ.2500க்கு வாங்கப்படுகிறது. கணு வெட்டிய கரும்புகளை அதே நிறுவனம் கொடுத்த விலைக்கு எடைபோடடு எடுத்துக்கொள்கிறது. இதன் மூலம் சுமார் ரூ.1500 வரை திரும்ப கிடைக்கிறது. ஒரு டன் கரும்பில் 8 ஆயிரம் கணுக்கள் வெட்டி எடுக்கலாம். மாதத்திற்கு 40 ஆயிரம் கரும்புநாற்று உற்பத்தி செய்கிறோம். ஒன்றரை லட்சம் நாற்றுகளுக்கு விவசாயிகள் ஆர்டர் கொடுத்துள்ளனர். கடந்த 2 மாதமாக நர்சரி கரும்புநாற்று வளர்ப்பதில் ஈடுபட்டு வருகிறேன். மாதம் ரூ.25 ஆயிரம் வருமானம் கிடைக்கிறதுÕ என்றார்.

## இடுக்கி மாவட்டத்தில் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி

மூணாறு: இடுக்கி மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

இடுக்கி மாவட்டத்தில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. தேயிலை, ஏலம், மிளகு, காப்பி, கரும்பு போன்ற பணப்பயிர்களும், காரட், முட்டைகோஸ், பீன்ஸ், உருளைகிழங்கு போன்ற காய்கறிகளும் இங்கு விவசாயம் செய்யப்படுகின்றன. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் விவசாயம் வெகுவாக பாதிக்கப்பட்டது.

மேலும் குடிநீருக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டது. பொதுமக்கள் பல கிமீ அலைந்து குடிநீர் எடுத்து வந்தனர்.

இந்நிலையில் இடுக்கி மாவட்டம் முழுவதும் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தங்கள் நிலங்களில் கோடை கால பயிர்களை சாகுபடி செய்ய துவங்கியுள்ளனர். தரமான விதைகள், உரம் ஆகியவற்றை வேளாண்மை துறை மூலம் தட்டுப்பாடின்றி கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

25.04.2013 A.M

## தழுதாழை உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு ரூ.80 ஆயிரம் மதிப்பில் இடுபொருட்கள் மானிய விலையில் தமிழ்செல்வன் எம்.எல்.ஏ. வழங்கினார்

வேப்பந்தட்டை

வேப்பந்தட்டையை அடுத் துள்ள தழு தாழையில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் ரூ.80 ஆயிரம் மதிப்பில் இடுபொருட்களை விவசாயிகளுக்கு மானிய விலையில் தமிழ்செல்வன் எம்.எல்.ஏ. வழங்கினார்.

**உழவர் பெருவிழா**

தமிழக முதல்அமைச்சர் ஜெயலலிதா தமிழகம் முழுவ தும் சித்திரை 1ந் தேதி முதல் 30 நாட்களுக்கு உழவர் பெரு விழா நடத்த உத்தரவிட்டார். இதனைத் தொடந்து பெரம் பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா பகுதியில் வேளாண்மைத் துறை சார்பில் ஊர் ஊராக உழவர் பெருவிழா நடைபெற்று வருகிறது. இதுவரை அன்ன மங்கலம், பெரியம்மாபாளை யம், பூலாம்பாடி, அரும்பாவூர், மலையாளப்பட்டி, ஆகிய ஊர்களில் உழவர் பெருவிழா நடைபெற்றுள்ளது.

**தழுதாழை**

இதே போல் தழுதாழை கிராமத்தில் நடைபெற்ற விழா விற்கு பெரம்பலூர் தொகுதி எம்.எல்.ஏ. இளம்பை தமிழ் செல்வன் தலைமை தாங்கி பவர் வீடர், விசைத் தெளிப்பான், கைத்தெளிப் பான், தாவர பூச்சி கொல்லி மருந்துகள், காய்கறி விதைகள், மரக்கன்றுகள் உள்ளிட்ட ரூ.80 ஆயிரம் மதிப்பில் இடு பொருட்களை விவசாயிக ளுக்கு மானிய விலையில் வழங்கினார். மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் சேகர், ஒன்றிய கவுன்சிலர் பத்மினி கோவிந்தராஜ், ஊராட்சி மன்றத் தலைவர் சதீஷ்குமார் ஆகியோர் முன் னிலை வகித்தார்கள். விழா வில் மாவட்ட வேளாண்மை இணை இயக்கு னர் சங்கர லிங்கம், துணை இயக்குனர் பன்னீர்செல்வம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இவ்விழாவில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் விற்பனைத்துறை, வேளாண் பொறியல்துறை, கால்நடைத்துறை மற்றும் வேளாண்மை சார்ந்த அனைத்து துறைகளின் சார்பில் நடைபெற்று வரும் திட்டங்கள் குறித்தும் சலுகை கள் குறித்தும் விளக்கி கூறப் பட்டது. முன்னதாக வேப்பந் தட்டை வேளாண்மை உதவி இயக்குனர் கீதா வரவேற்று பேசினார். முடிவில் வேளாண்மை அதிகாரி பிரேமா நன்றி கூறினார்.

## பெரம்பலூர் மாவட்டம் உழவர் பெருவிழாவில் மண்மாதிரிகள் சேகரிப்பதில் சாதனை

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட்டம் உழவர் பெருவிழாவில் மண்மாதிரிகள் சேகரிப்பதில் சாதனை படைத்துள்ளது.

**1008 மண்மாதிரிகள்**

பெரம்பலூர் மாவட்டத்தில் குரும்பலூர்(தெற்கு), வெங் கலம்(கிழக்கு), வெங்கலம் (மேற்கு), நாரணமங்கலம், எலந்தலப்பட்டி, துங்கபுரம் வடக்கு மற்றும் துங்கபுரம் மேற்கு ஆகிய கிராமங்களில் உழவர் பெருவிழா நடை பெற்றது.

ஆலத்தூர் வட்டாரம், எலந்தலப்பட்டி வருவாய் கிராமத்தில் உழவர் பெரு விழாவின்போது அலுவலர்கள் 1008 மண்மாதிரிகள் விவசா யிகளின் வயல்களில் இருந்து சேகரித்து சாதனை புரிந் துள்ளார்கள்.விவசாயிகள் மிக ஆர்வத்துடன் மண் மாதிரிகள் சேகரிக்க ஒத்துழைத்தார்கள்.

**பார்த்தீனியம் ஒழிப்பு**

உழவர் பெருவிழாவின் போது 2வது பசுமை புரட் சிக்காக இருமடங்கு மகசூல் மும்மடங்கு வருமானத்திற்கு ஏற்ப நவீன வேளாண் தொழில் நுட்பங்களான மண் மாதிரி எடுக்கும் முறை, மண்புழு உரம் தயாரித்தல் விதையை கடினப்படுத்தல், உயிர்உர விதை நேர்த்தி, இயந்திரம் மூலம் பருத்தி அறுவடை செய்யும் நுட்பங்கள், ஒருங் கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை எலி ஒழிப்பு மற்றும் பார்த்தீனியம் ஒழிப் பது பற்றியும், மக்காச்சோளம் மற்றும் வெங்காயத்தின் மதிப்பு கூட்டுப்பொருட்கள் தயாரிப்பது பற்றியும் நீடித்த நவீன கரும்பு சாகுபடி செய்யும் முறையும், மற்றும் கால்நடை பராமரிப்பு துறையின் மூலம் கால்நடைகளுக்கு சிகிச்சையும், தடுப்பு ஊசியும் போடப் பட்டது.

**மான்ய விலையில் இடுபொருட்கள்**

இவ்விழாவில் திட்ட அலு வலர்(புதுவாழ்வு திட்டம்) ,ஊராட்சி ஒன்றிய தலைவர் கள், வேளாண்மை இணை இயக்குநர், வேளாண்மை துணை இயக்கு நர்கள், வேளாண்மை உதவி இயக் குநர்கள், வேளாண்மை அலுவ லர்கள் மற்றும் சகோதர துறைகளான தோட்டக்கலை, விற்பனை மற்றும் வணிகம், கால்நடைத்துறை, வேளாண் பொறியியல் துறை, பருத்தி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கூட்டுறவுத்துறை, சர்க்கரை ஆலை தமது துறை சார்ந்த திட்டங்களை எடுத்துக் கூறினர். இவ்விழாவில் பயனா ளிகளுக்கு மான்ய விலையில் இடுபொருட்கள் வழங்கப் பட்டது.

விவசாயிகளின் அடிப்படை விபரங்கள் சேகரிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த விவசாயிகள் கையேடு வழங்கப்பட்டது.இன்று (வியாழக்கிழமை) லாடபுரம் (கிழக்கு), வெண் பாவூர், சாத்தனூர், கொட் டரை, காடூர்(வடக்கு) ஆகிய வருவாய் கிராமங்களில் உழவர் பெருவிழா நடைபெற இருக்கிறது என்று மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமது தெரிவித்துள்ளார்.

## பெரம்பலூர் அருகே ரூ.80 கோடியில் பால்பண்ணை அமைக்கும் திட்டம் முதல்அமைச்சருக்கு பாராட்டு தெரிவித்து ஒன்றியக்குழு கூட்டத்தில் தீர்மானம்

பெரம்பலூர்

பெரம்பலூர் அருகே ரூ.80 கோடியில் பால் பண்ணை அமைக்கும் திட்டத்தை அறிவித்து மருதையாற்றின் குறுக்கே ரூ.108 கோடி மதிப்பில் நீர்த்தேக்கம் கட்டுவதற்கும் உத்திர விட்டமைக்காக முதல் அமைச்சருக்கு பெரம் பலூர் ஒன்றியக்குழு கூட் டத்தில் நன்றிதெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

**ஒன்றியக்குழு கூட்டம்**

பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியக்குழு கூட்டம் துறை மங்கலத்தில் உள்ள ஒன்றிய அலுவலக அலுவலக கூட்ட அரங்கில் ஒன்றியக்குழுத் தலைவர் ஆர்.பி. மருதராஜா தலைமையில் நடந்தது.

துணை தலைவர் பிச்சை பிள்ளை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கண்ணன், பூங்குழலி ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

**26 தீர்மானங்கள்**

இதில் தமிழக மக்களின் நலன் கருதி 20132014ம் ஆண்டிற்கான வரியில்லா பட்ஜெட் தாக்கால் செய்தும், பால் உற்பத்தியாளர்களின் நலன் கருதி செங்குணம் அருகில் ரூ .80 கோடியில் பால் பண்ணை அமைக்கவும், விவ சாயிகளின் நலன் கருதி மருதையாற்றின் குறுக்கே ரூ. 108

கோடியில் நீர்த்தேக்க அணை கட்டவும் உத்திரவிட்ட முதல்அமைச்சர் ஜெய லலிதாவிற்கு நன்றி தெரிவிப் பது. மேலும் பசுமை வீடுகளுக்கான அலகுத் தொகை ரூ 1.80 லட்சத்திலிருந்து ரூ 2.10 லட்சமாகவும், இந்திரா நினைவு குடியிருப்பு திட்ட வீடுகளுக்கு அலகுத்தொகை ரூ.1 லட்சத்திலிருந்து ரூ 1.20 லட்சமாக உயர்த்தியும், கிராம ஊராட்சிகளில் துப்புரவு பணிகளுக்காக 16 ஆயிரத்து 729 கூடுதல் பணியிடங்களை உருவாக்கியும், 12 ஆயிரத்து 524 கிராம ஊராட்சிகள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றி யங்களில் சூரிய சக்தி, மின் வசதி செய்திட உத்தரவிட்ட தமிழக முதல்அமைச்சர் ஜெய லலிதாவிற்கு நன்றி தெரிவிப்பது என்பது உட்பட 26 தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

**கலந்து கொண்டவர்கள்**

கூட்டத்தில் ஒன்றிய கவுன் சிலர்கள் சேகர், ஜெயக்குமார், பன்னீர் செல்வம் ,செல்வராஜ், பால்ராஜ், கருணாநிதி, கைலாயி, ஜானகி, ராஜேஸ்வரி, பச்சைம்மாள், தேவகி, புகழேந்தி மற்றும் மேலாளர் சின்னபையன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கள் தயாளன், ஹேமலதா, கீதா, ஒன்றிய பொருளாளர் சதீஷ்குமார், எழுத்தர் பூவ ராகவன், ஓவர்சீயர் மணி வண்ணன், சத்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைகளை சிறப்பாக பராமரித்தவர்களுக்கு பரிசு மாவட்ட வருவாய் அதிகாரி வழங்கினார்

பெரம்பலூர்

பெரம்பலூர் மாவட் டத்தில் விலையில்லா வெள் ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் திட்டத் தின் கீழ் ஆடுகள் பெற்று சிறப்பாக பராமரித்த 15 பெண்களுக்கு ரூ.19 ஆயிரத்து 500 மதிப்பி லான கலப்பு தீவனம் மற்றும் நற்சான்றுகளை மாவட்ட வருவாய் அலு வலர் சுப்பிரமணியன் வழங்கினார்.

**மாவட்ட வருவாய் அதிகாரி வழங்கினார்**

பெரம்பலூர் மாவட்டம் அம்மாபாளையம் கிராமத்தில் நடைபெற்ற 2ம் பசுமைபுரட்சி உழவர் பெருவிழாவில் தமிழக முதலமைச்சரின் சிறப்புத் திட்டமான விலை யில்லா வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் திட்டத்தின் கீழ் ஆடுகள் பெற்று சிறப்பாக பராமரித்த 15 பெண்களுக்கு ரூ.19 ஆயிரத்து 500 மதிப்பிலான கலப்பு தீவனம் மற்றும் நற்சான்றுகளை மாவட்ட வருவாய் அலுவலர் சுப்பிரமணியன் வழங்கி னார்.

**2 ஆயிரத்து 795 குட்டிகள்**

இந்த நிகழ்ச்சியில் எம்.எல்.ஏ.தமிழ்ச்செல்வன் பேசிய தாவது:

பெரம்பலூர் மாவட்டத்தில் 2012 2013 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட 7ஆயிரத்து 664 ஆடுகள் இதுவரை 2 ஆயிரத்து 795 குட்டிகள் ஈன்றுள்ளன. இன்றைய நிலையில் ஒரு ஆண்டு வளர்ச்சியடைந்த ஆடு ரூ.2ஆயிரத்து 500க்கு விற்பனை செய்யப்படுகின்றது. முதலமைச்சரின் ஆடுகள் வழங்கும் திட்டத்தில் ஆடுகள் பெற்ற பயனாளிகள் ஆடுகளை நல்லமுறையில் வளர்த்து தங்கள் பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்.இவ்வாறு எம்.எல்.ஏ.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

**சான்றிதழ்கள்**

ஆடுகள் வழங்கப்பட்ட பயனாளிகள் சிறந்த முறையில் ஆடுகளை பராமரிக்க ஊக்கு விக்கும் வகையில் சிறப்பான முறையில் ஆடுகளை பரா மரித்த 15 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசாக பொம்மனப்பாடியைச் சேர்ந்த சே.பாக்கியம் என்பவருக்கு ரூ.3ஆயிரம் மதிப்பிலான கலப்பு தீவனம், 2வது பரிசாக எறையூரைச்சேர்ந்த செ.சாவித் திரி என்பவருக்கு என்பவருக்கு ரூ.2ஆயிரத்து 500 மதிப்பிலான கலப்பு தீவனம், சத்திரமனை கிராமத்தை சேர்ந்த ரா.தெய் வானை என்பவருக்கு ரூ.2 ஆயிரம் மதிப்பிலான கலப்பு தீவனம், 12 பேருக்கு ஆறுதல் பரிசாக ரூ.1,000 மதிப்பிலான கலப்பு தீவனம் மற்றும் பரிசு பெற்ற அனைவருக்கும் சான் றிதழ்கள் வழங்கப்பட்டது.

இந்த உழவர் பெருவிழா நிகழ்ச்சியில் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர் மருத ராஜா, மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் வடிவேல், ஊராட்சித்தலைவர் இரா.வளர்மதி, இணை இயக்குநர் கால்நடைபராமரிப்பு(பொ) மரு.தங்கராசு, உள்பட வேளாண்மைத்துறை அலுவ லர்கள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண் டனர்.

## வறட்சி நிவாரணம் உடனே வழங்கக்கோரி பொங்கலூரில் விவசாயிகள் உண்ணாவிரதம் விவசாயிகள் சங்கம் அறிவிப்பு

திருப்பூர்,

வறட்சி நிவாரணம் உட னடியாக வழங்கக்கோரி பொங்கலூரில் விவசாயி கள் உண்ணாவிரத போராட்டம் நடத்துவ தாக கட்சி சார்பற்ற விவ சாயிகள் சங்கம் அறி வித்து உள்ளது.

தேர்தல் வாக்குறுதி

கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்கத்தின் மாநில பொருளா ளர் என்.கே.டி. பொன்னுசாமி நிருபர்களுக்கு பேட்டி அளித் தார். அப்போது அவர் கூறிய தாவது:-

கடந்த சட்டமன்ற தேர்த லின் போது பொள்ளாச்சியில் நடந்த பிரசார கூட்டத்தில் பேசிய ஜெயலலிதா Ôநாங்கள் ஆட்சிக்கு வந்தால் கள்ளுக்கு விதித்திருக்கும் தடையை நீக்குவோம்Õ என்று உறுதி யளித்தார். ஆனால் ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகள் ஆகியும் இது குறித்து எந்த நடவடிக்கை யும் எடுக்கவில்லை.

அதேபோல உழவர் தலை வர் நாராயணசாமிக்கு கோவை வையம்பாளையத் தில் மணி மண்டபம் கட்டி தருவ தாக வாக்குறுதி அளித்த முதல்-அமைச்சர் ஜெயலலிதா இன்னும் அதற்கான நட வடிக்கை எடுக்கவில்லை.

நிவாரண தொகை

சாதாரண Ôகள்Õ இறக்கிய விவசாயிகள் சில பேர் மீது விஷÔகள்Õ இறக்கியதாக போலீ சார் பொய் வழக்கு போட் டனர். அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டும். தற் போது கூட்டுறவு சங்கங்களில் நடைபெற்று வருகின்ற நிர் வாகிகள் தேர்தலில் முறைகேடு கள் நடைபெற்று வருகிறது. இதை முதல்-அமைச்சர் தடுத்து நிறுத்த வேண்டும்.

கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நிவாரண தொகை இதுவரை கொங்கு மண்டல விவசாயிகள் யாருக் கும் கிடைக்கவில்லை. ஏக் கருக்கு ரூ.5 ஆயிரம் என்பதை ரூ.15 ஆயிரமாக உயர்த்தி நிவாரணம் வழங்க வேண் டும்.

உண்ணாவிரதம்

தேங்காய் விலை மிகவும் குறைந்து வருவதால், உரிக்காத தேங்காயை ஒரு கிலோ ரூ.30 வீதம் அரசே கொள்முதல் செய்ய வேண்டும். அதேபோல கொப்பரை தேங்காயை கிலோ ரூ.100க்கு கொள்முதல் செய்ய வேண்டும். வெளி மாநிலங்களிலிருந்து வாங்கும் பாமாயிலை அரசு நிறுத்தி விட்டு, தேங்காய் எண் ணையை ரேஷன் கடைகளில் வினி யோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது போன்ற கோரிக்கைகளை அர சுக்கு முன் வைக்கிறோம்.
இதில் முக்கிய கோரிக்கை களான வறட்சி நிவாரணத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும்.

விவசாயத் திற்கு தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும் ஆகிய இந்த 2 கோரிக்கைகளை முன் வைத்து நாளை (வெள்ளிக் கிழமை) காலை 10 மணிக்கு, பொங்கலூர் பஞ்சாயத்து யூனியன் அலுவலகம் முன் உண்ணாவிரத போராட்டம் நடத்த உள்ளோம்.

திரளான விவசாயிகள்

உண்ணாவிரதத்துக்கு கொடுவாய் நகர தலைவர் கோகுல் ரவி தலைமை தாங்கு கிறார். பொங்கலூர் வட்டார துணைத்தலைவர் பழனிசாமி முன்னிலை வகிக்கிறார். மாநில பொருளாளர் என். கே. டி.பொன்னுசாமி உண்ணா விரதத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்று கிறார். உண்ணாவிரத போராட் டத்தில் திருப்பூர் மற்றும் பொங்கலூர் வட்டார நிர் வாகிகள் மற்றும் விவசாயி கள் திரளாக கலந்து கொள்கி றார்கள். முடிவில் கோவை மாவட்ட தலைவர் தங்கராஜ் உண்ணா விரதத்தை முடித்து வைக் கிறார்.
இவ்வாறு மாநில பொருளா ளர் பொன்னுசாமி தெரிவித் தார்.

பேட்டியின்போது திருப்பூர் மாவட்ட தலைவர் காளிமுத்து பொதுச்செயலாளர் ஈஸ்வரன், கோவை மாவட்ட தலைவர் சண்முகம், கொடுவாய் நகர தலைவர் கோகுல்ரவி, அவி னாசி வட்டார செயலாளர் அருணாசலம் ஆகியோர் உடன் இருந்தனர்.

## தர்மபுரி மாவட்டத்தில் லேசான மழை: பென்னாகரம் அருகே ஆலங்கட்டி மழை பெய்தது

தர்மபுரி

தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் நேற்று லேசான மழை பெய்தது. பென் னாகரம் அருகே ஆலங்கட்டி யுடன் மழை பெய்தது.

**கோடை வெயில்**

தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில வாரங்களாக கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்தது. 100 டிகிரியை தாண்டி வெயில் கொளுத்தி யது. வெயிலின் உக்கிரத்தால் பொதுமக்கள் அவதிக்குள்ளா னார்கள்.

நேற்று முன்தினம் இரவு தர்மபுரி மாவட்டத்தின் சில பகுதிகளில் லேசான மழை பெய்தது. நேற்று பகல் நேரத் தில் வழக்கம் போல் வெயில் வாட்டியது. நேற்று பிற்பகலில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கருமேகங்கள் திரண்டன. பின்னர் ஆங் காங்கே மழை பெய்தது.

**ஆலங்கட்டி மழை**

பென்னாகரம் தாலுகாவில் நாகதாசம்பட்டி உள்ளிட்ட சில இடங்களில் ஆலங்கட்டி யுடன் மழை பெய்தது. பாப் பாரப்பட்டி, பாலக்கோடு ஆகிய பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்தது. தர்மபுரி நகரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகள் உள்பட மாவட்டத் தின் பல்வேறு இடங்களில் லேசான தூறல் இருந்தது. ஓரளவு மழை பெய்த பகுதி களில் நேற்று மாலை வெப்பம் தணிந்து மிதமான குளிர்க் காற்று வீசியது.

## நல்லம்பள்ளி பகுதியில் வறண்டு கிடக்கும் பாசன ஏரிகளால் விவசாய தொழில் கடும் பாதிப்பு வேலைதேடி வெளியூர் செல்லும் தொழிலாளர்கள்

தர்மபுரி

நல்லம்பள்ளி பகுதியில் உள்ள பாசன ஏரிகள் வறண்டு காணப்படுவ தால் விவசாயத்தொழில் கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளது. இதனால் இந்த பகுதியை சேர்ந்த தொழிலாளர்கள் வேலை தேடி வெளியூர்களுக்கு செல்கிறார்கள்.

**விவசாய தொழில் பாதிப்பு**

தர்மபுரி மாவட்டம் விவ சாயத்தை முக்கிய தொழிலாக கொண்ட மாவட்டமாகும். இந்த மாவட்டத்தில் நல்லம் பள்ளி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் கோவிலூர், அதிய மான்கோட்டை, லளிகம் நார் த்தம்பட்டி உள்ளிடட 5க்கும் மேற்பட்ட பாசன ஏரிகள் உள் ளன. இவற்றில் லளிகம் நார்த் தம்பட்டி ஏரிகள் மூலம் அந்த பகுதியில் உள்ள ஆயிரக்கணக் கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வந்தன.

இந்த நிலையில் கடந்த சில ஆண்டுகளாக லளிகம், நார்த் தம்பட்டி ஏரிகள் தண்ணீர் இன்றி வறண்டு விட்டன. இதனால் இந்த ஏரிகளில் கிடைக்கும் தண்ணீரை கொண்ட விவ சாய பணிகள் நடந்து வந்த விளைநிலங்களில் விவசாயம் முழுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. இதனால் இந்த பகுதியில் விவசாயத்தையே நம்பி வாழ்க்கை நடத்தி வந்த பலர் தற்போது வேலை தேடி பெருநகரங்களுக்கு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.

**ஏரிகளை சீரமைக்க கோரிக்கை**

இதுதொடர்பாக நார்த்தம் பட்டி லளிகம் பகுதி கிராமங் களை சேர்ந்த பொது மக்கள் தரப்பில் கூறுகையில், எங்கள் பகுதியில் கிணற்றுப் பாசன விவசாயம் மிகவும் குறைவு. ஏரிப்பாசனத்தை கொண்டு விவசாயம் செய்யப் பட்டு வந்தது. கடந்த பல ஆண்டு களாக மழைப்பொழிவு குறைந்

ததால் இங்குள்ள ஏரிகளில் தண்ணீர் தேங்குவது குறைந்து விட்டது. மழைகாலத் தில் ஏரிகளுக்கு தண்ணீர் வரும் வழிகளும், தண்ணீர் செல்லும் பாதைகளும் பல இடங்களில் அடைப்பட்டு விட்டன. ஏரித்தண்ணீர் இல் லாததால் விவசாயம் முழுமை யாக பாதிக்கப்பட்டு விட்டது. இதனால் இந்த பகுதி கிராமங் களை சேர்ந்த இளைஞர்கள், தொழிலாளர்கள் பெங்களூர், கோவை போன்ற பகுதிகளுக்கு வேலைக்கு செல்கிறார்கள்.

ஏரிப்பாசனத்தை விவசாய ஆதாரமாக கொண்டஇந்த பகுதியில் உள்ள ஏரிகளில் அடர்ந்து வளர்ந்துள்ள முள் செடிகள், புதர்களை அகற்ற வேண்டும். பின்னர் ஏரிகளை தூர்வாரி சீரமைக்க வேண்டும். நல்ல மழைபெய்யும்போது இந்த பகுதி ஏரிகளுக்கு தண் ணீர் தங்கு தடையின்றி வருவதற்கு உரிய பணிகளை சம்பந்தப்பட்ட துறையினர் செய்ய வேண்டும். விவசாய தொழில் முடங்கியுள்ளதால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் கள், தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் கிடைக் கும் வகையில் தர்மபுரி பகுதி யில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்கும் பணியை விரைவு படுத்த வேண்டும் என்று தெரிவித்தனர்.